பதிவு இலக்கம் : 105267
வார இதழ்
# தீபம்
16.09.2020 தீபம் – 242
இணையப் பதிப்பு



## இருபதாவது திருத்தமும் இலங்கையின் எதிர்காலமும்.. 2

கௌரவம் பெற்ற
அருட்கலாநிதி
நீ. மரியசேவியர் அடிகளார்.

சுமந்திரனின்
முற்போக்குச் சக்திகளும்
இருபதாவது திருத்தமும்.



## ஒரு தியாகம் சோதனைக்குட்படுத்தப்படுகிறதா..?

BRAIN CHIP
## மூளையில் சிப்

# கவனமாக செயற்படுங்கள்...!
## காலம் உங்களை கண்காணிக்கிறது!
- குருபார்வை -

கட்சி அரசியலுக்கப்பால் மக்கள் அரசியலைப் பேசும் தமிழருக்கான ஒரே வார இதழ்



# 400 ஆவது ஆண்டு நிறைவு

# யாழ்ப்பாண நகரத்தின் வரலாற்றுச் சுவடுகள்

## ஒல்லாந்தர் கால நல்லூர்–2

இ. மயூரநாதன்

மந்திரிமனையின் வெளிப்புறத் தோற்றம்

இத்தொடரில் கடந்த கிழமை வெளியான கட்டுரையில் நல்லூரில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலம் தொடர்பான சில தகவல்களையும், அக்காலத்துக்குரிய சில கட்டிடங்களின் எச்சங்கள் பற்றிய விபரங்களையும் பார்த்தோம். இன்றைய கட்டுரை ஒல்லாந்தர் கால நல்லூர் குறித்த மேலும் சில விபரங்களைத் தருகின்றது. நல்லூரில் உள்ள மந்திரிமனை என அழைக்கப்படும் கட்டடம், தமிழரசர் காலத்து மந்திரி ஒருவரின் மாளிகையின் எச்சம் என்ற கருத்து ஒரு காலத்தில் நிலவிய போதும், இது ஒரு ஒல்லாந்தர் காலக் கட்டடத்தின் எச்சம் என்ற கருத்தையே இன்றைய ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இந்தக் கட்டடம் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பயன்பாட்டில் இருந்துள்ளது.

இக்கட்டடத்தின் பிரதான பகுதி ஒல்லாந்தர் காலத்துக்கு உரியதாக இருக்கலாம். எனினும், காலத்துக்குக் காலம் இதில் திருத்த வேலைகள் இடம்பெற்றுள்ளன. இங்குள்ள மரத் தூண்களிலும், வேறிடங்களிலும் திராவிடப் பாணிப் போதிகைகள் காணப்படுகின்றன. பிற்காலத் திருத்த வேலைகளின்போது பழைய கட்டடங்களில் இருந்து எடுக்கப்பட்ட கூறுகளை இக்கட்டடத்தில் பயன்படுத்தியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் இக்கட்டடத்தில் திருத்த வேலைகளோ, விரிவாக்கமோ இடம்பெற்றுள்ளன.

இக்கட்டடத்தின் முன் பகுதியில் இருக்கும் வாயில் அமைப்பு இப்போதிருக்கும் நிலையில் பிற்காலத்தைச் சேர்ந்தது. இதில் உள்ள கல்வெட்டொன்றிலிருந்து, திரி ஒலக்க வாயில் என அழைக்கப்பட்ட இந்த அமைப்பு 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டது எனத் தெரிகின்றது. இந்த வாயில் அமைப்பு அந்தக் காலத்தில் கட்டப்பட்ட பிற கட்டட அமைப்புக்களை ஒத்ததாகக் காணப்படவில்லை. ஒருவேளை இதேயிடத்தில் முன்னர் இருந்து பழுதடைந்த ஒரு கட்டிட அமைப்பின் பாணியை ஒத்ததாகப் புதிதாகக் கட்டப்பட்டிருக்கலாம். இந்தத் திரி ஒலக்கவாயில் கட்டடத்துக்குப் பின்னால் அமைந்துள்ள பகுதி பிரித்தானியர் காலத்திலும் அதற்குப் பின்னரும் வீடாகப் பயன்பட்டுள்ளது. பிரதான வாயிலுக்கு நேரெதிரே பெரிய கூடத்துக்கு மேற்கில் காணப்படும் அறைகள் பிற்காலத்தன வாகவே தோன்றுகின்றன. இக்கட்டடத்தை வீடாகப் பயன்படுத்துவதற்காக இந்த மாற்றம் செய்யப்பட்டிருக்கலாம். தொடக்கத்தில் இக்கட்டடம் என்ன பயன்பாட்டுக்காகக் கட்டப்பட்டது என்பது தெளிவில்லை. இன்று எஞ்சியுள்ள கட்டடப் பகுதியில் தொடக்கத்தில் ஒரு குடும்பம் வாழ்வதற்குப் போதுமான அறைகள் இருந்ததாகத் தெரியவில்லை. இன்று எஞ்சியிருக்கும் இப்பகுதி முன்னர் பெரிதாக இருந்த ஒரு வீட்டின் பகுதியாக இருக்கலாம். அல்லது உயர் பதவியில் இருந்த அதிகாரி ஒருவர் மக்களைச் சந்திக்கும் மண்டபமாக இது இருந்திருக்கலாம். இது ஒல்லாந்தர் காலத் திசாவை ஒருவரின் அலுவலகமாக இருந்திருக்கலாம் என்ற கருத்தும் உண்டு.

நல்லூரில் காணப்படும் இன்னொரு முக்கியமான விடயம் யமுனா ஏரி என அழைக்கப்படும் கேணியாகும். யாழ்ப்பாண வைபவமாலையிலும், பிற்கால ஆய்வாளர் பலரது நூல்களிலும் இக்கேணி யாழ்ப்பாண மன்னர் காலத்தைச் சேர்ந்தது என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு வாய்ப்புக்கள் உள்ளன எனினும், இதைத் தெளிவாக நிறுவுவதற்கான சான்றுகள் போதிய அளவு இல்லை. இந்தக் கேணி அரச குடும்பத்தினர் குளிப்பதற்காகக் கட்டப்பட்டது என்றும், பழைய நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தீர்த்தக் கேணியாகப் பயன்பட்டது என்றும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், ஒல்லாந்தர் காலத்திலும் இதைத் திருத்தி வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர். இதன் உற்பத்தி பற்றிக் கூறும் வைபவமாலை "பூங்காவன நடுவிலே ஸ்நான மண்டபமும் முப்புடைக் கூபமும் உண்டாக்கி" என்கிறது. யமுனாரியின் மூன்று பக்கங்களால் சூழப்பட்ட நடுப் பகுதியில் ஒல்லாந்தர் காலத்தில் மண்டபம் ஒன்று இருந்தது. அது ஸ்நான மண்டபம் அல்ல. ஆனால், தமிழரசர் காலத்தில் இங்கே ஸ்நான மண்டபம் ஒன்று இருந்தது குறித்துத் தெரியவில்லை. மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவமாலை எழுதியது ஒல்லாந்தர் காலத்தின் இறுதிப் பகுதியிலாகும். அக்காலத்தில் அழிபாடுகளாக இருந்த இந்தக் கேணியையும், மண்டபத்தையும் நூலாசிரியர் தமிழரசர் காலத்தது என எண்ணியிருக்கவும் வாய்ப்பு உண்டு.

இன்று முத்திரைச் சந்தைப் பகுதியில் உள்ள பரி. யாக்கோபு தேவாலயம் இருக்கும் இடத்தில் முன்னர் ஒல்லாந்தரின் தேவாலயம் இருநதுள்ளது. நல்லூரில் இருந்த கிறித்தவத் தேவாலயம் ஓலைக்



மந்திரிமனை நுழைவாயிலை நோக்கிய தோற்றம், திராவிடப் பாணிப் போதிகைகளுடன் கூடிய மரத் தூண்களைக் காண்க.

கூரையுடன் கூடிய மண்ணாலான கட்டடமாக இருந்ததாகப் பல்தேயஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார். பல்தேயஸ் பாதிரியார் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தது ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் தொடக்கப் பகுதி. அக்காலத்திலேயே நல்லூர்த் தேவாலயம் நிரந்தரமற்ற கட்டிடப் பொருட்களால் ஆனதாக இருந்திருக்கும். காலப் போக்கில் ஒல்லாந்தர் இத்தேவாலயத்தை ஓடு வேய்ந்த கற்கட்டடமாகக் கட்டியிருப்பர் என்பதில் ஐயமில்லை.

பிரித்தானியர் காலத் தொடக்க ஆண்டுகளில் கவனிப்பாரற்றுக் கிடந்த இக்கட்டிடத்தையே, 1818 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் வந்த சேர்ச் மிசன் சபையினர் பொறுப் பெடுத்துத் திருத்தி, அங்கே தமது தலைமை யகத்தையும், பாடசாலையையும் அமைத்தனர் என ஊகிக் கலாம்.

பிற்காலத்திலே பழைய ஒல்லாந்தத் தேவாலயம் இன்றைய தோற்றத்தில் திருத்தப்பட்டது. தற்காலத்தில் இந்தத் தேவாலயத் துக்குக் கிழக்கே அக்கட்டிடத்தை அண்டிக் காணப்படும் பழைய அத்திவாரங்கள் ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம். ஒல்லாந்தர் காலத்தில், யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஒல்லாந்தக் குடியேறிகளுக்கு, நல்லூர் ஒரு சுற்றுலாத் தலமாகவும், குழுவாக வந்து பொழுது போக்கிச் செல்லும் இடமாகவும் இருந்ததாகவும் ஹாஃப்னர் என்பவர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பயன்பாட்டுக்காக நல்லூரில் சிறப்பு வசதிகள் இருந்திருக்கக்கூடும். ஆனால் அவற்றைக் குறித்த தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை.

யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயரிடம் வீழ்ச்சியடைந்த பின்னர், அதன் தலைநகரமாக இருந்த நல்லூரின் வரலாறு குறித்துப் போதிய ஆய்வுகள் செய்யப்படவில்லை. இது தொடர்பான பல தகவல்கள் ஊகங்களாகவே காணப்படுகின்றன. முறையான அகழ்வாய்வுகள் புதிய தகவல்களைத் தரக்கூடும் ஆனால், இதற்கான வாய்ப்புக்கள் குறைந்து வருகின்றன. உலகின் பல்வேறு ஆவணக் காப்பகங்களில் உள்ள போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆவணங்களைக் கவனமாக ஆய்வு செய்வதன் மூலமும் நல்லூரின் குடியேற்றவாதக் கால வரலாறு தொடர்பான பயனுள்ள தகவல்கள் கிடைக்கக்கூடும். இவ்வாறான ஆய்வுகளை முன்னெடுப்பதற்காக போர்த்துக்கேய, டச்சு மொழிப் பயிற்சியுடன், தேவையான பிற பயிற்சிகளும் மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டும். மாணவர்களல்லாத பிற ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் பயன்பெறத்தக்க வகையில் இவ்வாறான பயிற்சிகளை வழங்கினால் கூடுதல் பயன் கிடைக்கலாம்.



யமுனாரி என அழைக்கப்படும் கேணி

சுவடுகள் தொடரும்...

பதிவு இலக்கம் : 105267
வார இதழ்
தீபம்
16.09.2020 தீபம் – 242
இணையப் பதிப்பு

## ஜே.ஆரின் தடங்களில் கோத்தாபாய...

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபாய ராஜபக்ஷவுக்கு கிடைத்த பாரிய வெற்றிக்குப் பின் நாட்டின் அரசியலில் மிகப்பெரும் அதிர்ச்சி தரும் மாற்றங்களுக்கான எதிர்வு கூறல்கள் பல தரப்பினரா லும் முன்வைக்கப்பட்டதுடன் நாட்டின் ஜனநாயகத்தின் எதிர்காலம் குறித்தும் அச்சம் தெரிவிக்கப்பட்ட போது, அடுத்து வரவிருந்த பொதுத் தேர்தல் முடிவுகளே அதனை முழுமையாக நிர்ணயிக்கும் என்றும் கூறப்பட்டது.

எதிர்பார்த்தது போன்று பொதுசன பெரமுன எவருமே எதிர் பார்த்திராத பெரும்பான்மை பலத்துடன் வென்று நாட்டின் அதிகாரப் பலம் ராஜபக்ஷக்களின் கைகளுள் சரண் புகுந்த பொழுது தேசிய ரீதியில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் இலங்கையின் அரச நிர் வாக நகர்வுகள் முற்றிலும் புதியதான ஜனநாயக சர்வாதிகாரப் பொறி முறைக்குள் கொண்டு செல்வதற்கான சாத்தியக்கூறுகள் "கொரோனா" வேகத்தில் தீவிரம் கொள்வது அவதானிக்கப்பட்டது.

குறிப்பாக 19 ஆவது திருத்தச் சட்டம் நீக்கம், 20 ஆவது திருத்தச் சட்டத்திற்கான முன்மொழிவு, 13 ஆவது திருத்தச் சட்ட ஒழிப்புக்கான அழுத்தங்கள் என அதுவரை இருந்த நிர்வாகப் பொறிமுறைகளை முற்றாக - உடனடியாக இல்லாது ஒழிக்கவும், புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கும், நோக்கிலான நடவடிக் கைகளை முன்னெடுக்கவும் வேண்டிய அறிவிப்புகள் வெளியாகத் தொடங்கின. இந்த அரசியல் முன்னெடுப்புகள் யாவும் தேர்தலுக்கு முன்னரான எதிர்வு கூறல்களை நிஜமாக்கு வது போன்றே அமைந்ததமை இலங்கையின் கனவை யதார்த்த மாக்கிவிட வேகம் காட்டும் தன்மையை வெளிப் படுத்தின.

தாம் நினைத்ததை, விரும்பியதை, இலக்குத் தவறாமல் வென்றெடுக்க வசதியான புறச்சூழலை உருவாக்குவதில் ஜனாதிபதி காட்டிய வேகம் அனைத்துப் பாதுகாப்புகளுடன் தனது அதிகாரத்தை ஜே.ஆர். ஜெயவர்த்தனா போன்று முழுமையாக தன்வசம் எடுத்துக் கொள்ள நல்லாட்சிக் கால 19 ஆவது திருத்தச் சட்ட மூலம் தடையாக இருப்பதைப் புரிந்து கொண்டு அதனை 20 ஆவது புதிய சட்டமூலம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதன் அடிப்படையில் போட்ட திட்டம் இன் னும் நிறைவேற்றப்படாவிட்டாலும் அதனை எத்தகைய எதிர்ப்பு முனையிலும் சந்தித்து சாதித்துக் கொள்ளும் சர்வாதிகார பலம் அவருக்கு உண்டு. அந்த நம்பிக்கை ஜனாதிபதிக்கு மிக அதிகமா கவே உண்டு.

அதற்கு அவர் முன்னர் ஜே.ஆர் ஜெயவர்த்தனா என்ற "தர்மிஷ்டர்" தம்மிஷ்டப்படி பயன்படுத்தி உக்தி முறைகளையே கையாண்டு நிறைவேற்றிக் கொள்ள முனைகின்றார் என்று இடது சாரிப் பிரமுகர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன அவர்கள் எச்சரித் துக் கூறியிருப்பதை எவரும் புறந்தள்ளி விட முடியாது.

அதாவது 1978 இல் தமிழ் மக்களுக்கு எதிரான பிர சாரத்தை தென்னிலங்கையில் தீவிரமாக்கிவிட்டு முழுநாட்டுக் கும் எதிரான சட்டங்களை நடைமுறைப்படுத்திய ஜே.ஆரின் தந்திரோபாய உத்தி யையே கோத்தபாய ராஜபக்ஷ அவர்களும் கைக்கொள்வதாக அவர் கூறியிருக்கிறார்.

20 ஆவது திருத்தச் சட்டம் மிகமோசமான சர்வாதிகார யுகத்தை நோக்கி நாட்டை பயணிக்க வைக்கும் ஒன்றாகவே உள் ளது. 1978 ஆண்டின் அரசியலமைப்பு 1979 இல் நடைமுறைக்குள் ளாக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆகிய வற்றை அமுல் செய்ய முயன்ற போது ஜே.ஆர் ஜெயவர்த்தனா அவர்கள் தமிழர் களுக்கு எதிரான பிரசாரத்தை - பயங்கரவாதிகளுக்கு எதிரான பிர சாரமாகக் காட்டிக் கொண்டே நகர்வினை மேற்கொண்டார். அந்த உத்தியையே இப்போது 20 ஆவது திருத்தத்தை கொண்டு வரும் போதும் கோத்தாபாய கையாள முனைந்துள்ளார்.

நாட்டின் எந்தவொரு கேடான சட்டத்தையும் முதலில் தமிழ் மக்களுக்கெதிராகவே கொண்டுவரப்படுகிறது பின்னர் நாட்டின் சகல தரப்பினரையும் ஒடுக்குவதற்கு பயன்படுத்தப் படுகிறது பின்னர் நாட்டின் சகல தரப்பினரையும் ஒடுக்குவதற்கு பயன்படுத்தப்படுகிறது. இதுவே இந்த நாட்டின் அரசியல் வரலாறு என கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னா விபரித்துள்ளார்.

இப்போது பேரினவாத அரசியல்வாதிகளும் சரி, முன்னாள் இராணுவ அதிகாரிகளான இந்நாள் அரசியல்வாதிகளும் சரி, அரசி யல்வாத தேரர்களும் சரி தமிழர்களுக்கு எதிரான சகலவிதமான வகையிலான நகர்வுகளையும் தீவிரமாக மேற் கொள்வதற்கு அரசு மௌன அங்கீகாரத்தையும் ஆதரவையும் வழங்கி வருவதைப் பார்க் கையில் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னாவின் கருத்து முற்றும் முழுதும் உண்மையானதாகவே உள்ளது என்பதை உணர்ந்து கொள்ள கூடியதாக உள்ளது. ஆனால் சில தமிழர் தலைவர்களுக்கு இந்தச் சூட்சும அரசியலை பற்றியெல்லாம் புரிந்து கொள்ள விருப்பமு மில்லை. தேவையுமில்லை. அவர்களின் அபிவிருத்தி அரசியல் என்ற முகவர் வேலைக்கு அது ஒன்றும் அவசியமில்லை என்றே நினைக்கிறார்கள். உரிமைக்காக அரசியலை, அழிவுக்கான அரசி யல் பாதையில் மாற்றி அபிவிருத்தியை அடையமுடியும் என நம்பு வோர்களால் நாட்டிற்கோ, மக்களுக்கோ எந்த விதமான நன்மையும் ஏற்படப்போவது கிடையாது...

ஜே.ஆர் காட்டிய பாதையில் இலங்கை சந்தித்த அழிவுகளை யும் மக்கள் சந்தித்த அவலங்களையும், மட்டும்மல்ல அவமானங் களையும் கூட கோத்தபாய ராஜபக்ஷ சகோதரர்களும் அறியாதவர் களல்லவே...!

# தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளரின் இராஜினாமா ஒரு "பௌல் கிக்?" Foul Kick ?

இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளரான கிருஸ்ணபிள்ளை துரைராஜ சிங்கம் கட்சியில் தனது செயலாளர் பதவியை ராஜினமா செய்துள்ளதான கடிதத்தை இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு கடிதம் ஒன்றின் ஊடாக அறிவித் துள்ளார். அதேவேளை, தனிப்பட்ட காரணங்களுக்காகவே தனது பதவியை ராஜினமா செய்யத் தீர்மானித்ததாகவும் தனது கடித்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குறித்த பதவி விலகல் கடிதத் தின் நகலொன்றைத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவருக்கும் அவர் அனுப்பி வைத்துள்ள தாகச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

2014 ம் ஆண்டு முதல் இதுவரை கட்சியின் பொதுச் செயலாளராகப் பதவி வகித்துள்ள இவர் கட்சியின் உட்பூசல்களை அடுத்தே பதவி விலகியுள்ளதாகத் தகவல்கள் கசிந்து வருவதை யும் மறுப்பதற்கில்லை.அத்துடன் கடந்த தேர்தலின் பின்னர் தேசியப் பட்டியல் தெரிவில் தன்னிச் சையாக முடிவெடுத்த சுமந்திரனின் "பாவைப்பிள்ளையாக" இவர் செயற்பட்டதாலேயே இவருக் கெதிராகக் கட்சியுள் எதிர்ப்புத் தோன்றியதென்பதையும், அதனாலேயே அவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதென்பதையும் யாவரும் அறிவர். இந்த நிலை யில் கட்சி தனக்கு அநீதி இழைத்திருப்பதாக மக்களுக்குத் தெரிவிக்கின்ற ஒரு நாடகமாகவே அவரது இராஜினமா அமைந்துள்ளதாகக் கட்சி உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.


"தனிப்பட்ட காரணங்களுக்காகவே தனது பதவியை ராஜினமா செய்தேன்" என்று அவர் சொல்வது ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணம்தான். அதனை மறுப்பதற்கில்லை. ஆனால் நம் பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததும் இராஜினமாச் செய்வது என்பதைத்தான் ஏற்றுக் கொள்ள முடியாதிருக்கிறது. அவரது இராஜினமா என்ற விடயம் அவர் மீது ஏனைய கட்சி உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் "இவர் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை." என்ற கருத்தை மிகவும் வலுப்படுத்துவதாகவே காணப்படுகிறது.

எந்தவிதத் தனிப்பட்ட காரணமாக இருந்தாலும் "நீங்கள் கடந்த ஆறு வருடங்களாகச் செய்த கட்சிக் காரியங்களில் எமக்கு நம்பிக்கை இல்லை" என்று கட்சி மத்திய உறுப்பினர்கள் பலர் குரலெழுப்பும்போது அதனை எதிர்கொண்டு, அதற்கு முகம் கொடுத்து, அதனைச் சவாலாக ஏற்றுக் கொண்டு கட்சிச் செயலர் என்ற முறையில் திரு.துரைராஜசிங்கம் அவர்கள் பதிலளித் திருக்க வேண்டும். அதுவே பொதுவாழ்கையை, மக்கள் சேவையை ஏற்றுக் கொண்டவர்கள் செய்ய வேண்டிய பொறுப்புமிக்க கடமை என்றாகிறது. இவருக்கு எதிராகக் கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் இவர் வெற்றி கொள்ளும் பட்சத்தில் கட்சிக்குள் இவரது மதிப்பும், நியாயமும் மேலோங்கும். தோற்பாரேயானால் மக்களை நோக்கி "சூழ்நிலைக் கைதி யாகிவிட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுப் பதவி விலகியிருந் தால் அவரது மதிப்பு இன்னும் உயர்ந்திருக்கும். அப்படியான மனித மாண்பைச் செயலர் இழந்து விட்டதாகவே நம்பலாம். தேசியப்பட்டில் நடவடிக்கை தொட்டு அவரது இராஜினமாவரை நடந்த அத்தனை விடயமும் பத்திரிகைகள் வாயிலாகப் பொது வெளிக்குக் கொண்டு வந்த பின்பு "கண் களை மூடிப் பால் குடிக்கும் பூனைக்கு ஒப்பாகச் செயலை மேற்கொள்வது" என்பது செயலர் தன்னைத்தானே ஏமாற்றுவதாக அமையாதா? அவருக்கு மதி நுட்பராக இருப்பவரும் இதனைச் வலுவாகச் செவிமடுப்பாரா?

தற்போது இவர் எடுத்திருக்கும் முடிவு என்பது ஒன்றில் கட்சியில் தன்மீது வைத்திருக்கும் நம்பிக்கை இல்லை என்ற விடயத்தை ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று பொருள்படவா? இல்லாவிடில் கட்சிக்குள் நடந்ததாகச் சொல்லப்படும் முறையற்ற செயற்பாட்டை அல்லது செயற் பாடுகளை வெளிச்சக்குக் கொண்டு வராதிருக்க நான் துணைபோகிறேன் என்று ஏற்றுக் கொள் வதாகாதா? எப்படி மக்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றதைச் செயலர் விளக்குவாரா?

- கம்சன் -

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





# அரச சக்திகளிடம் ஒரு வேண்டுகோள்

## இடர்காலப் பதிவுகள்

**உலக நிலவரம்**

தொற்றாளர்கள் **29.82 மில்லியன்**

இறப்பு **941,042**

குணமடைந்தோர் **21.62 மில்லியன்**

**இலங்கை நிலவரம்**

தொற்றாளர்கள் **3271** சிகிச்சை பெறுவோர் **237** குணமடைந்தோர் **3021**

- கணபதி சர்வானந்தா -

கடந்த ஏப்ரல் - மே மாத காலப் பகுதியில் சொல்லப்பட்ட கொரோனா பற்றிய ஆருடம் இது. "எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திலே கொரோனவின் உக்கிரத்தை இந்தியா உச்சமாக உணரும்." என்பதே அந்த ஆருடத்தின் சாரம். இந்தக் கருத்து மேற்குலக நாடுகளில் உள்ள புலமையாளர்களாலேயே முன்வைக்கப்பட்டிருந்தது. இன்று, இந்தியா கொரோனாவின் அதி உட்சபட்சத் தாக்கத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் நாடுகளில் முன்னிலை வகிக்கின்றது. அந்த அடிப்படையில் பார்த்தால் மேற் சொல்லப்பட்ட ஆருடத்தின் பின்னணியில் அரசியல் இருப்பதாக நாம் ஏன் சந்தேகப்படக்கூடாது? அதற்கு ஆதாரமாக இருக்கக் கூடிய பின்வரும் விடயங்களை எடுத்தாய்ந்து கொண்டு மீண்டும் இந்திய கொரோனா அரசியல் நிலைமையைப் பேசலாம் என்றிருக்கிறேன்.

கொரோனா நோய்த் தொற்றிற்குப் பின்னரான காலப்பகுதியில், உலகளவில் அவ்வப்போது ஏற்படும் காலநிலை மாற்றங்களைப்போல, அரசியல் தளத்திலும் பாரிய மாற்றங்கள் ஏற்படத்தொடங்கி இருக்கின்றன. அவை சாதாரண மானவை என எடுத்துக் கொள்ளும் அளவினைத் தாண்டி, வல்லரசுகளுக் கிடையே போட்டி, பொறாமைகளைத் தோற்றுவித்திருக்கிறது. "நீயா? நானா? " என்றதைப்போல பலப்பரீட்சைகளை உருவாக்கி இருக்கிறது. ஆயுதத்தை ஏந்தாதவாறு ஒரு பனிப்போர் என்ற நிலைக்கு அவர்களை எடுத்துச் சென்றிருக்கிறது. அப் பனிப்போர் பற்றி ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குடெரெஸ் தனது குறிப்பில் "உலகின் இரு பெரிய பொருளாதாரங்களான அமெரிக்கா மற்றும் சீனா இடையே ஏற்பட்டிருக்கும் பிளவுகள் உலகில் பாரிய எதிர்வினையாற்றக் கூடியவை" என்று அவர் எச்சரித்துள்ளார்.

அண்மையில், உலகப் பிரசித்தி பெற்ற பிரித்தானிய ஒலிபரப்புச் சேவையில் (BBC) நடத்தப்படும் "ஹாட் ரோக்" (HARD TALK) நிகழ்ச்சியில் நடைபெற்ற இணைய வழி நேர்காணல் ஒன்றில், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஜீனப் படாவின் கேள்வி ஒன்றிக்கு ஐ.நா.பொதுச் செயலாளர் அன்டோனியோ குடெரெஸ் பதிலளிக்கும்போது, "சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பனிப்போரை நாம் தவிர்க்க வேண்டும்.அதுமட்டுமல்ல, இந்த இருநாடுகளும் வெவ்வேறு வர்த்தக விதிகள், வெவ்வேறு இன்டர்நெட்டுகள் , வெவ்வேறு புவி - அரசியல் மற்றும் இராணுவ உத்திகள் கொண்ட தனிப் பொருளாதாரங்களுடன் செயற்பட முயற்சிப்பதில், இரண்டு தனித்தனி உலகங்களை உருவாக்கும் அபாயம் இருக்கிறது." என்றும், "கொரோனா வைரஸ் தொற்று, காலநிலை மாற்றம் மற்றும் மனிதகுலம் எதிர்கொள்ளும் பிற சவால்களைச் சமாளிக்க உதவுவதற்காக, உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து மதிக்கும் விதிகள் கொண்ட ஒரு உலகளாவிய பொதுப் பொருளாதாரத்தை வகுக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது " என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"இரண்டு தனித்தனி உலகங்களை உருவாக்கும் அபாயம் இருக்கிறது," என்று மேலே அவர் குறிப்பிட்டிருப்பதற்கு அப்பால் சென்று,"அந்த அபாயத்தை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்" என்றுதான் சொல்லலாம். அமெரிக்கா, ரஸ்யா, சீனா, இந்தியா ஆகிய நாடுகள் தமக்குள் அணிசேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டதைத் தொடர்ந்து, ஆசியாப் பிராந்தியத்தில் அவ்வாறானதொரு அபாய அறிவித்தல் விடப்பட்டிருக்கிறது. அண்மையில் ரஸ்யாவின் முயற்சியில் , அங்கு நடைபெற்ற சீன - இந்திய வெளிவிவகார அமைச்சர்களின் சந்திப்பின் பிறகு, இந்தியாவைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரச் சீனா எடுத்த மறைமுக முயற்சி வெற்றியளித் திருப்பதாகவே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ஆனால், அமெரிக்காவோடு இந்தியா கொண்டுள்ள இராஜ தந்திர மற்றும் வர்த்தக உறவுகளின் அடிப்படையில் சீனா எடுத்துள்ள முயற்சி முழுமையாக வெற்றியளிக்குமா? என்பது சந்தேகமே என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

அதே நேரம் இந்தியாவைச் சூழ இருக்கின்ற நாடுகளின் அரசியலுக்கூடாக இந்தியாவுக்கு அழுத்தம் கொடுக்கின்ற முயற்சிகளையும் சீனா மேற்கொண்டிருக்கிறதென்பதற்கு இலங்கை அரசியற் செயற்பாடுகள் சான்றாகின்றன. இருந்தும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ற வலிந்து திணிக்கப்பட்ட உடன்படிக்கை ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு இலங்கையைப் பல வழிகளிலும் தனது கட்டுப்பாட்டுக்கள் வைத்திருக்கலாம் என்று இந்தியா எண்ணுவது நடைமுறையில் சாத்தியமாகுமா? என்ற கேள்விக்கு, இலங்கையின் புதிய சட்ட வரைபு வரட்டும். அப்போது அதனைப் பார்க்கலாம் என்று அரசியல் ஆய்வாளர் குறிப்பிட்டிருக்கிறார். இன்றைய நிலவரப்படி இந்தியாவில், நோய்த்தொற்று ஏற்பட்டவர்கள் தொகை 50 இலட்சத்தைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது. அதிலே நோயிலிருந்து மீண்டவர்கள் என 40 இலட்சம் பேரைக் குறிப்பிடலாம். இதுவரை, ஏறத்தாழ 82 ஆயிரம் பேர்வரை மரணித்திருக்கிறார்கள். இந்தக் காலகட்டத்தில் தமது நாட்டில் காணப்படும் தொற்றைக் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கும் அதே வேளை, தமது நாட்டில் இருந்து கொரோனா எல்லையைக் கடக்கக் கூடாது என்பதில் இந்தியா உறுதியாக இருக்க வேண்டியதும், அவர்களுக்குரியதொரு தார்மீகப் பொறுப்பு என்றும் சொல்லலாம். ஏனெனில், இலங்கைச் செய்தியின்படி இந்தியாவுக்கு அண்மித்த இலங்கை நகரமாகக் காணப்படும் தலை மன்னாருக் கூடாக அந்நோய் இலங்கைக்குள் பரவலாம் என்று எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது. இலங்கைக்கும் - இந்தியாவுக்குமிடையே கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் கடத்தல்காரர்களால் இவ் அனர்த்தம் இடம்பெறலாம் என்ற ஊகத்திலேயே அந்த எச்சரிக்கை விடப்பட்டிருக்கலாம் என்றே எண்ணத் தோன்றுகிறது. "பரவலாம் என்ற எச்சரிக்கையை, ஏன்? பரப்பப் படலாம்," என்று எடுக்கக் கூடாது என்பது எம்மவர் ஒருவரது வாதம். அவரது வாதத்தை அவரது ஊகம் என்று எடுத்துக் கொண்டால்.. கொரோனாவுக்கு முன்னரே அமெரிக்கா - சீனா மீது பொருளாதார நெருக்கடிகளைத் தோற்றுவிக்கத் தொடங்கிவிட்டது. இருந்தும் கொரோனாவுக்குப் பின்னரே அது நேரடியாக வலுப்பெற்றிருக்கிறதெனலாம். அமெரிக்கப் பொருளாதாரத்தைப் பலவீனமாக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாகவே தான் இதனைப் பார்ப்பதாகவும், கொரோனா வைரஸ்ஸினால் அமெரிக்காவில் ஏற்பட்ட இழப்புக்குச் சீனா பொறுப்புக் கூறவேண்டும் எனவும் சீனாவைத் தொடர்ந்தும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சாடி வருகிறார்.

அதே நேரம் உலக வர்த்தக மையமாகப் பிரகடனப்படுத்தி, உலக முதலீடுகளை ஊக்குவிக்கின்ற சீன - மாகாணமாகக் காணப்படுகின்ற வூஹான் மாகாணத்திலேயே தொற்றும் தொடங்கி இருக்கிறது. அங்கேயே தொற்று நோய்களை ஆராய்ச்சி செய்கின்ற ஆராய்ச்சி மையத்தையும் சீனா நிறுவியுள்ளது மாத்திரமல்ல இத்தொற்றின் ஆரம்ப நிலையை அறிந்தவரெனக் கருதப்பட்ட வைத்திய அதிகாரியும் காணாமல் போய்விட்டதாகச் சீனா அறிவித்துள்ளது.

அவர் காணாமல் போனாரா? அல்லது காணாமல் ஆக்கப்பட்டாரா? என்ற புதிர் இன்னும் அவிழ்க்கப் படாமலே இருக்கிறது. சீனா அதனை இரகசியமாக வைத்திருக்கும் மர்மம் என்ன? நிலைமை இப்படியாயின், சந்தேகங்கள் வலுப்பதில் அர்த்தமுண்டு. எனவே, பரவுவது என்பது இயல்பு. பரப்பப்படுவது என்பது அரசியல். இந்து சமயப் பிராந்தியத்திலே கேந்திர முக்கியத்துவம் கொண்ட இலங்கையும் தற்போது உள்ளும், புறமும் பலவிதமான அரசியல் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

இந்த வேளையில், இப்படியான "பரவலாம் " என்ற எச்சரிக்கை இங்குள் மக்களை பயமடையச் செய்வதோடு, அவர்களை மென்மேலும் பலவீனப் படுத்துகிறது. மன்னாருக்கு ஊடாக உள் நுழையும் கொரோனா வைரஸ் இன, மத, மொழி கடந்து எல்லோரையும் தாக்கலாம் என்பதுதான் உண்மை நிலவரம். எனவே அனைவரும் விழிப்புணர்வோடு இருப்பது அவசியம். மன்னாரில் அதிகளவு தாக்கம் தென்படும் பட்சத்தில், மன்னாரில் ஏற்படுத்தப்படும் முடக்கமானது, காலப்போக்கில் நாடு முழுவதுக்குமான முடக்கமாக மாறலாம் என்ற அடிப்படையில் கடத்தல்காரர்களும், சட்டவிரோதக் குடியேற்றவாசிகளும் நாட்டுக்குள் உள்நுழையாதவாறு முறையாகக் கண்காணிக்கப்பட வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இதனை அரசு உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுவும் அவர்கள் வேண்டுகோளாகக் காணப்படுகிறது. நோய் பரவலாம்.. பரப்பப்படலாம்.. என்ற பயத்துடன் தான் மக்கள் தொடர்ந்து வாழவேண்டுமா? என்பதை அரசுதான் தீர்மானிக்க வேண்டும்.

# மொன்ரீநீக்ரோ அரசியல் மேற்கிலிருந்து கிழக்கிற்குச் சாய்கிறதா?

- ஐ.வி. மகாசேனன்



சர்வதேச அரசியலின் சமீபத்திய நிகழ்வுகள் சில மீளப் பனிப்போர்க் காலத்தை ஒத்த பதிவுகளை நினைவு படுத்திச் செல்கிறது. அதாவது ரஷ்சியா சார்பு, மேற்குலகு சார்பு என்ற நிலைப்பாட்டில் ரஷ்சியா, ஐரோப்பிய எல்லையோர நாடுகள் தமது அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் ஒரு குழப்பகரமான அரசியல் சூழல் காணப்படுகிறது. ஆகஸ்ட் - 9 பெலாரஸ் தேர்தல் முடிவிற்கு பின்னரான மக்கள் போராட்டம் வல்லரசுகளின் மோதுகை பற்றி ஓர் ஆழமான செய்தி சொல்வது போன்றே, ஆகஸ்ட்-31 மொன்ரீநீக்ரோ தேர்தல் முடிவுகளும் வல்லரசுகளின் மோதுகையில் மக்களின் விருப்பை ஆழமான செய்தியாக வெளிப்படுத்தி யுள்ளது. அதனை மையப்படுத்தியே இக்கட்டுரையும் மொன்ரீநீக்ரோ தேர்தல் முடிவுகளையும் அதன் அரசியல் செல்நெறியை தேடுவதாக அமைகிறது.

ஈழத்தமிழர் பலரும் முன்னறியாத நாடாக மொன்ரீநீக்ரோ காணப்படுமா யின், அதுவும் ஈழத்தமிழர் தங்கள் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் இதுவரை வெற்றி பெறாமைக்கான கார ணமாகவும் இருக்கலாம். சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிக் கடந்த 2006ஆம் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் சுதந்திரம் பெற்ற அரசாக மொன்ரீநீக்ரோ காணப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் அவர்களும் 2007ஆம் ஆண்டு தனது மாவீரர் தின உரையில், “விடுதலைக் காகப் போராடிய கிழக்குத் தீமோர், மொன்ரீநீக்ரோ போன்ற தேசங் கள் சர்வதேசத்தின் ஆதரவோடும் அனு சரணையோடும் புதிய தேசங்களாக அடிமை விலங்கை உடைத்தெறிந்து கொண்டு விடுதலை பெற்றன.” என மொன்ரீநீக்கோவை சுட்டிக்காட்டியிருந் தார்.

சுயநிர்ணய உரிமைக்காகப் போரா டும் இனம் என்ற ரீதியில் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி விடுதலை பெற்ற தேசங்களின் வரலாற்றிலிருந்து பாடங் களைக் கற்பது அவசியமாகிறது. மொன்ரீ நீக்கோவின் கடந்தகால வரலாற்றைத் தனியாக அவதானிப்போம். இக்கட்டுரை மொன்ரீநீக்கோவின் நிகழ்கால அரசி யலை தேடுவதாகவே அமைகிறது. மொன்ரீநீக்கோவின் அரசியலை தேடுவ தாயின் அதன் புவியியல் அமைவிடத்தை யும் தெளிவாக அறிந்திருத்தல் அவசிய மாகிறது. இது வடமேற்கில் போஸ்னியா - ஹெற்சகோவினா, வடகிழக்கில் செர்பியா, கிழக்கில் கொசோவோ, தென்கிழக்கில் அல்பேனியா, தெற்கே அட்ரியாடிக் கடல் மற்றும் தென்மேற்கில் குரோஷியாவின் எல்லையாக உள்ளது. பூகோள அரசி யலை நோக்குமிடத்து கிழக்கே ரஷ்சியா வையும், மேற்கே ஐரோப்பிய ஒன்றியத் தையும் கொண்டு மொன்ரீநீக்கோ காணப்படுகிறது. கடந்த அரசாங்கம் மொன்ரீநீக்கோவை ஐரோப்பிய ஒன்றியத்தினுள் இணைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ் அறிவுடன் மொன்ரீநீக்கோவின் அரசியலை தேடு வதே அதன் உள்ளார்ந்த அரசியல் விருப் புகளை அறிய இலகுவாக அமையும்.

மொன்ரீநீக்கோவில் கடந்த ஆகஸ்ட் 30 பொதுத்தேர்தல் நடைபெற்றது. ஆகஸ்ட்-31 பொதுத்தேர்தல் முடிவில், கடந்த 30வருடங்களாக மொன்ரீநீக்கோ வின் அடையாளமாக திகழ்ந்த ஆளுங்கட்சியான சோசலிச ஜனநாயகக் கட்சி தோல்வியைத் தழுவியுள்ளது. மொன்ரீநீக்கோவின் ஜனாதிபதியாகச் சோசலிச ஜனநாயக கட்சியின் தலைவர் மிலோ யுக்கேனாவிச் காணப்படுன்றார். யுக்கேனாவிச், 2023ஆம் ஆண்டிலேயே மறுதேர்தலை எதிர்கொள்கிறார், ஆனால் எதிர்க்கட்சித் தலைவர்கள் அவரது பதவிக்காலம் முடிவதற்குள் பொதுத் தேர்தல் முடிவில் கட்சியின் தோல்வியை ஏற்று ராஜினாமா செய்யுமாறு வலியுறுத்தி யுள்ளனர். இந்நிலையில் பொதுத்தேர்த லில் சோசலிச ஜனநாயக கட்சியின் தோல்வியானது, கட்சியினதும் யுக்கேனாவிச்சினதும் கொள்கைகளை மறுசீரமைக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது.

மிலோ யுக்கேனாவிச் 1991ஆம் ஆண்டில் தனது 29வது வயதில் ஜனாதிபதியானர். யுக்கேனாவிச், ஐரோப்பாவில் மிக இளம் வயதில் ஜனாதிபதியானவர் என்ற பெருமையை பெற்றவராக காணப்படுகின் றார். 1990களின் ஆரம்பத்தில் யுகோஸ் லாவியாவின் உடைவைத் தொடர்ந்து, சேர்பியாவுடனான ஒன்றியம், 2006இல் சுதந்திர நாடு எனப் பல பரிமாணங்களை மொன்ரீநீக்ரோ சந்தித்த போதெல்லாம், யுக்கேனாவிச்சும் ஜனாதிபதி, தலைமை அமைச்சர் என்ற பல பரிமாணங்களில் நாட்டை வழிநடாத்தி வந்துள்ளார். ஆரம்பத்தில் ஒரு பொதுவுடமைவாதியாக விளங்கிய அவர் காலப்போக்கில் தேசியவாதியாகவும், பின்னாளில் மேற்குலகு சார்பானவராகவும் கொள்கை மாற்றம் பெற்று வந்துள்ளார்.

2006ஆம் ஆண்டில் மொன்ரீ நீக்கோ சுதந்திரம் பெற்ற நாள் முதலாக மொன்ரீநீக்கோவை ஐரோப்பிய ஒன்றியத் தில் இணைப்பதற்கான விருப்பம் கொண்டிருந்த யுக்கேனாவிச், அதற்காக விண்ணப்பத்தை ஐரோப்பிய ஒன்றியத் தில் மேற்கொண்டுள்ளார். அதேவேளை 2017 இல் வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளுடன் (நேட்டோ) மொன்ரீநீக் கோவை இணைத்துள்ளார்.

யுக்கேனாவிச்சின் மேற்குசார் நிலைப்பாட்டு மாற்றம் மொன்ரீநீக்ரோ மக்களில் பெரும்பான்மையோருக்கு உடன்பாடிருக்கவில்லை. சமீபத்திய கணக்கெடுப்புத் தரவுகளின்படி, நாட்டின் 630,000 மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கை சேர்பிய இனமாக அடை யாளம் காணப்படுகிறது. பெரும்பான்மை யானவர்கள் திருச்சபையின் உறுப்பினர் களாக இருப்பதால், அதன் செல்வாக்கு கணிசமானது. அச்சமூகம் மேற்குலகுட னான உறவை விட சேர்பியா மற்றும் ரஷ்சியா ஆகியவற்றுடனான உறவைப் பேணவே பெரிதும் விரும்புகின்றனர். ஆளுந்தரப்பின் மேற்குசார் உறவின் விருப்புக்கு எதிரான மக்கள் விருப்பே தேர்தல் முடிவுகளில் பிரதிபலிக்கப்பட் டுள்ளது. செர்பியா மற்றும் ரஷ்சியாவுடன் நெருக்கமான உறவுகளை விரும்பும் மற்றும் சக்திவாய்ந்த செர்பிய ஆர்த்த டாக்ஸ் சேர்ச்சின் ஆதரவுடன் இருக்கும் “எதிர்காலம் மொன்ரீநீக்கோவிற்காக“ என்ற செர்பிய தேசியவாத கட்சிகளின் கூட்டணி 32.55% வாக்குகளைப் பெற்றது. இக்கட்சியே 12.53 % வாக்குகளை பெற்ற ஒரு மைய - வலது குழுவான அமைதி என்பது எங்கள் தேசம் கட்சியுடனும், 5.53% வாக்கு களை பெற்ற பசுமை கட்சியான ஐக்கிய சீரமைப்பு கட்சி கூட்டணியுடனும் இணைந்து மொன்ரீநீக்ரோவில் புதிய அரசாங்கம் அமைக்கப்படுகிறது. சேர்பிய ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்ட ஜனநாயக முன்னணியின் தலைவர் ஸ்ட்ராவ்கோ கிரிவோகபி புதிய அரசாங்கத்தின் தலைமை அமைச்சராக வரவும் வாய்ப்புள்ளது. சோசலிச ஜனநாயக கட்சியின் தோல்வியில் செல் வாக்கு செலுத்திய உடனடிக் காரணியாக, சக்திவாய்ந்த சேர்பிய ஆர்த்தடாக்ஸ் சர்ச் மீதான பிளவுகள் காணப்படுகிறது. வரலாற்று உரிமையை நிரூபிக்க முடியாதபோது, மதச்சொத்துக்களை பறிமுதல் செய்ய அனுமதிக்கும் ஒரு சட்டம் டிசம்பரில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திலிருந்து பல மாதங்கள் யுக்கேனாவிச் சிற்கு எதிர்ப்புக்கள் உள்ளன. அதாவது “குறித்த திருச்சபை தன்வசம் வைத்திருக் கும் காணிகளை அவை தனக்குரியவை என நிரூபிக்க வேண்டும். இல்லாவிடில் அவை அரசுடமையாக்கப்படும் “என்பதாக சட்டம் உருவாக்கப்பட்டது. இச்சட்டம் திருச்சபையை மட்டுமன்றி அதனை ஆதரித்து நிற்கும் மக்களையும் அரசின் மீது சினம் கொள்ளச்செய்தது. இதனைத் தொடர்ந்து திருச்சபையின் ஆதரவோடு அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நிகழத்தொடங்கின.

மக்களின் மதச்சுதந்திரத்தில் அரசாங்கம் கைவைக்க அனுமதிக்க முடியாது என்ற அடிப்படையில் ஆரம்ப மான ஆர்ப்பாட்டங்கள் அரசாங்கத்தின் ஊழல் மற்றும் மேற்குலக சார்பு கொள்கைக்கு எதிராகவும் மக்களை திரட்டியது. மொன்ரீநீக்ரோவில் வாழும் மக்களில் அநேகமானோர் கத்தோலிக்க மதத்தையே பின்பற்றினாலும் கூட அவர்கள் மேற்குலக வத்திக்கானில் உள்ள திருச்சபையினைச் சார்ந்த மரபினர்கள் இல்லை. மாறாக ரஷ்சியா வில் பின்பற்றப்படும் பழைமைவாத கத்தோலிக்கத் திருச்சபையை பின்பற்று பவர்களாகவே மொன்ரீநீக்ரோ கத்தோலிக்கர்கள் உள்ளனர்.

கலாசார, பண்பாட்டு, மத அம்சங் களில் ரஷ்சியா மற்றும் சேர்பியாவுடன் நெருங்கிய உறவை கொண்டுள்ள மொன்ரீநீக்ரோ மக்கள் தமது பழமை யான நெருக்கத்தைப் பேண விரும்புகை யில் அவர்களை மேற்குலகை நோக்கி இழுத்துச்செல்ல முனையும் யுக்கேனா விச்சின் செயற்பாடுகள் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தி உள்ளன. இந்நிலையில் பாராளுமன்ற தேர்தலில் யுக்கேனாவிச்சிற்கு எதிராக வாக்களிக்குமாறு மொன்ரீநீக்ரோ திருச்சபை விடுத்த அழைப்பை பெரும் பாலான மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார் கள் என்பதையே தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துகிறது.

மதரீதியான காரணியால் மேற்கை தவிர்த்து கிழக்கே ரஷ்சியாவுடன் நெருக்க மான உறவைப்பேண மொன்ரீநீக்ரோ அரசாங்கத்தை மக்கள் நிர்ப்பந்திப்பது சாமுவேல் பி. ஹண்டிங்டன் நாகரீகங்களின் மோதல் (The Clash of Civilization) எனும் நூலில் குறிப்பிட்டுள்ள பனிப்போருக்கு பிறகு உண்டான உலக அரசியல் கலாசாரங்களுக்கிடையிலான மோதலாக கொள்கைகள் புறந்தள்ளப் பட்டு அரசுகளின் கூட்டுக்கான காரணி யாக கலாசாரங்களே காணப்படும் என்பதையே உறுதி செய்கிறது. ஆயினும் மேற்குசார் ஊடகங்கள் புதிய அரசாங்கம் ரஷ்சியா சார்பாக செயற்படு வதை எச்சரிக்கை செய்யும் வகையிலேயே செய்தியிடுகின்றன.

ஈரோ நியூஸ் (Euro News) செய்தித் தளத்தில் மொன்ரீநீக்ரோவின் போட் கோரிகாவை தளமாகக் கொண்ட மத்திய தரைக்கடல் பல்கலைக்கழகத்தின் தலைவர் மற்றும் அட்லஸ் குழுமக் கழகத்தின் தலைவர் டுஷ்கோக்னெஷெ விக் எழுதியுள்ள கட்டுரையில், “ரஷ்சிய செல்வாக்கு குறித்த அச்சத்திற்கு எதிராக மேற்கு நாடுகளுக்கு எதிராக விளையாடு வதற்கான அவரது திறமையே யுக்கேனா விச்சின் கட்சி இவ்வளவு காலமாக அதிகாரத்தில் ஒட்டிக் கொள்ள முடிந்தது. ஒரு மேற்கத்திய சீர்திருத்தவாதியாக தன்னைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட அவர், தேர்தலுக்குப் பின்னர் தேர்தலில் கிழக்கு நாடுகள் மேற்கு நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காக முத்திரை குத்தினார். அதே நேரத்தில் பரவலான மற்றும் நன்கு அறிவிக்கப்பட்ட ஊழல் மற்றும் தேர்தல் மோசடிகளுக்கு கண் மூடித்தனமாகத் திரும்பினார்.” என யுக்கேனாவிச்சின் நிலைப்புக்கு மேற்குசார்பு நிலையை ஒய்யாரமாகவும், வீழ்ச்சிக்கு ஊழலே காரணமென கருத்தை வலிந்து திணிக்கிறார். மேற்கு சார்புக்கு எதிரான ரஷ்சிய திருச்சபையின் பிரச்சாரத்தையும் இலாபகரமாக மூடி மறைக்க முயலுகின்றனர். புதிய கூட்டணி அரசாங்கமும் மேற்கு சார்ந்த கொள்கைகளை தொடரப்போவதாக வெற்றியின் பின் கருத்துரைத்துள்ளனர். செப்ரெம்பர்-09 அன்று புதிய அரசாங்க கூட்டணி மூன்று தலைவர்களிடையே வெளியிடப்பட்ட ஒரு ஒப்பந்தம் "நேட்டோவுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் மேம்படுத்தவும்" உறுதியளிக்கிறது.


மேலும் ஐரோப்பிய ஒன்றிய உறுப் பினர் பேச்சுவார்த்தைகளை விரைவுபடுத் துவது தொடர்பான முந்தைய அறிவிப்பு களுடன் இணைந்து, அவர்கள் யுக்கேனாவிச்சின் கூற்றுக்களை முன்வைத்துள்ளனர். ஆட்சி மாற்றத்திற் கான பிரச்சார பின்னணி மேற்கு எதிர்ப் பையும், பண்பாட்டுரீதியான ரஷ்சிய சார்பு நிலையையும் வெளிப்படுத்தி நிற்க, உறுதியற்று அமைக்கப்பட்ட புதிய கூட்டணி அரசாங்கம் ரஷ்சியா தொடர்பாக நேராகவோ / எதிராகவோ எவ்வித கருத்தின்றி தொடர்ச்சியாக மேற்கு சார்பு நிலைப்பாட்டை பேணுவதற்கான உறுதிப்பாடு குழப்பமான சூழலை ஏற் படுத்துகிறது. புதிய கூட்டு அரசாங்கத்தின் செயற்பாட்டு காலப்பகுதியிலேயே மொன்ரீநீக்ரோ மேற்கு சார்பானதா? ரஷ்சியா சார்பானதா? என உறுதி செய்யக்கூடியதாக காணப்படும்.

# இருபதாவது திருத்தமும் இலங்கையின் எதிர்காலமும்.. 2

சிலம்பு

சென்ற வாரக் கட்டுரையில் இரட்டைக் குடியுரிமை உள்ளவர் சனாதிபதியாக வரலாம் என்ற திருத்தத்தையும் அகவையை முப்பதாகக் குறைப்பதைப் பற்றியும் பார்த்தோம். அதற்கிடையில் நாடாளுமன்றத்தில் சட்ட மூலம் வைக்கப்பட்ட பின்னர் அதில் சில திருத்தங்களைச் செய்ய அரசு முடிவு செய்திருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன. எது, எப்படியாக இருந்தாலும் இருபதாவது திருத்தம் என்பது நாட்டை ஒரு குடும்பச் சர்வாதிகார முறைமைக்கு இட்டுச் செல்ல வழி வகுக்கும் என்ற அச்ச உணர்வை எங்கும் விதைத்துள்ளது என்பதே உண்மையாகும்.
இதற்கிடையில் "மகிந்த ராஜபக்ச இரண்டு ஆண்டுகளில் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவார்" என்றும் "பிரதமராகப் பசில் ராஜபக்ச அடுத்துப் பதவி ஏற்பார் " என்றும் கூறப்பட்டது. ஆனால் மகிந்த அதனைப் புறம் தள்ளியுள்ளார். அதில் உள்ள உண்மை, பொய் எது என்பது தெரியவில்லை.ஆனால் இங்கே எழுந்துள்ள வினா என்னவென்றால், சனாதிபதி பதவி வெற்றிடமானால்.. அடுத்த சனாதிபதி யார் ? என்பதாகும். அவ்வாறான நிலைமையில்,அரசியல் யாப்பின் படி பிரதமரே சனாதிபதியாக வர வேண்டும். ஆனால் இப்பொழுது அப்படி அவர் வர முடியுமோ? என்றால், முடியாது! ஏனெனில் இரண்டு முறைக்கு மேல் ஒருவர் சனாதிபதியாக வர முடியாது என்று தான் இப்பொழுதும் யாப்புக் கூறுகிறது.அது மட்டுமல்ல இருபதாவது திருத்தத்திலும் அது மாற்றப்படவில்லை. ஒருவர் இருமுறைக்கு மேல் சனாதிபதியாக வரமுடியாது என்பதில் மாற்றம் செய்யப்படவில்லை .இது மகிந்தவின் மனதில் ஒரு நெருடலை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

சனாதிபதிக்கு அதிகாரங்கள் மீண்டும் கொடுக்கப்படுவதால், நாடு எங்கே போகப்போகிறது? என்ற அச்ச உணர்வு மேலோங்குவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.முன்னர் குறிப்பிட்டது போல் ஓர் இராணுவச் சிந்தனையுடன் ஆட்சி செய்ய வந்துள்ள கோத்தபாயா இருபதுக்கும் மேற்பட்ட முன்னாள், இந்நாள் இராணுவ அதிகாரிகளைப் பல முக்கிய துறைகளில் பொறுப்பாக நியமித்திருப்பதே முக்கிய காரணமாகப் பார்க்கப்படுகிறது. அது மட்டுமல்ல இருபதாவது திருத்தத்தின் பின்னர் கையில் அதிகாரங்கள் குவியும் பொழுது அவர் மேலும் பல இராணுவ அதிகாரிகளைப் பல்வேறு கட்டமைப்புகளிலும் நியமிக்கக் கூடும். அவை பற்றி எவரும் கேள்வி எழுப்ப முடியாத நிலை தான் இருக்கிறது.இது மட்டுமல்ல இராணுவ அதிகாரிகள் நிர்வாகத்தில் குறைந்தவர்கள் அல்ல என்று அவர் ஏற்கனவே கூறியதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். இக்கூற்று சிறிலங்கா நிர்வாக சேவை என்பதன் கட்டமைப்பையே கேள்விக்குள்ளாக்குவதும், தேவையற்றதும் என்ற ஒரு நிலைக்கு நாட்டைக் கொண்டு சென்று விடும் என்று தான் அச்சப்பட வேண்டியுள்ளது. இருபதாவது திருத்தம் பற்றிப் பார்க்கும்போது சனாதிபதியின் அதிகாரங்கள் பற்றியே இங்கு அதிக




கவனம் செலுத்தப்படுகிறது. அது உண்மையும் கூட .ஆனால் அது பதினேழாவது திருத்தத்தில் இருந்து பார்க்கப்பட வேண்டியதாகவே இருக்கிறது.பதினேழாவது திருத்தம் தான் சனாதிபதியின் அதிகாரங்களை நாடாளுமன்றத்திற்கு மாற்றுவதற்காகக் கொண்டு வரப்பட்ட முதல் திருத்தமாகும். ஆனால் நிறைவேற்று சனாதிபதி முறைமையை நீக்குவதாக வாக்குறுதி அளித்த சந்திரிகா பின்னர் பதவிஆசையால் அதை முற்றாக நீக்க முன் வரவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களையும், வெளியார் சிலரையும் அடங்கிய அரசியல் பேரவை ஒன்றை நிறுவி அதன் மூலம் காவற்றுறை ஆணைக்குழு,இலஞ்ச ஊழல் ஆணைக்குழு,தேர்தல் ஆணைக்குழு,போன்ற நிர்வாக கட்டமைப்புகளுக்கு சுயாதீன ஆணைக்குழுக்களைத் தெரிவு செய்து அரசியல் தலையீடு அற்ற நிர்வாகத்தை நடாத்த வழி காணப்பட்டது. ஆனால் சந்திரிகா அதனைச் செவ்வனே நடைமுறைப்படுத்தாமல் பின்வாங்கிவிட்டார்.

இதன் பின்னர் ஆட்சிக்கு வந்த மகிந்த ராஜபக்ச இரு முறை தான் ஆட்சியில் இருக்கலாம் என்ற யாப்பின் விதிகளை மாற்றி வேண்டியளவு காலம் சனாதிபதி பதவியில் இருக்கலாம் என்ற திருத்தத்தைக் கொண்டு வந்ததுடன் பதினேழாவது திருத்தத்தையும் மாற்றிப் பதினெட்டாவது திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். இதன் மூலம் நிறைவேற்று சனாதிபதியின் அதிகாரங்கள் முன்னர் போன்று ஜே ஆர் ஆட்சியிலிருந்த நிலைக்குச் சென்று விட்டது.இதன் பின்னர் மைத்திரிபால சிரிசேனா ரணில் இணைந்த அரசு நிறைவேற்று அதிகார சனாதிபதி முறைமையை நீக்குவதாக அறிவித்திருந்தாலும் அதைச் செய்யாது மீண்டும் ஆணைக்குழுக்களைக் கொண்டுவருவதற்கு பத்துப் பேர் கொண்ட அரசியல் அமைப்புப் பேரவையை நிறுவுவதென்று முடிவு செய்தது. அப்பேரவையில் அரசியல் கட்சியின் பிரதிநிதிகளாக ஏழு பேரும், மூன்று பேர் வெளியில் இருந்தும் தெரிவு செய்யப்படுவர் எனத் தீர்மானிக்கப்பட்டு இருந்தது.

இந்த ஆட்சிக்காலத்தில் நிறைவேற்று சனாதிபதி முறைமையை முற்றாக நீக்குவதற்கான பெரும்பான்மை இருந்தும் அவர்கள் அதைச் செய்யாமல் விட்டதே இன்று இவ்வாறான மாற்றங்களுக்கு வழி வகுத்தது எனலாம். ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சனாதிபதி ஆக வேண்டும் என்ற ஆசை இருந்தது. எனவே முற்றாகச் சனாதிபதி ஆட்சியமைப்பை மாற்றுவதற்கு அவரும் பின்னடித்தார். ஆனால் நிலைமையோ முற்றாகத் தலை கீழாகிவிட்டது.பொதுத் தேர்தலில் ரணிலின் கட்சி காணாமல் போய் விட்டது. ராஜபக்சாக்கள் மூன்றில் இரண்டு பலத்துடன் ஆட்சியமைத்துள்ளனர்.

இப்பொழுது மீண்டும் இருபதாவது திருத்தத்தின் மூலம் சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை முன்னரைப் போன்று கொண்டு வர உள்ளனர். முன்னர் பத்தொன்பதாவது திருத்தம் என்பது சனாதிபதியின் கைகளை ஓரளவு கட்டி வைத்திருந்தது என்று தான் கூற முடியும். நாடாளுமன்றத்தில் அரசியலமைப்புப் பேரவையை உருவாக்கி அதன் மூலம் சில ஆணைக்குழுக்களை நிறுவி முக்கிய துறைகளின் சீரான சேவைக்கு ஆணைக்குழுத் தலைவர்களை நியமிப்பதற்கு வழி இருந்தது. ஆனால் இப்போதைய திருத்தத்தின் படி பத்துப் பேரைக்கொண்ட அரசியலமைப்புப் பேரவைக்குப் பதிலாக ஐந்து பேரைக் கொண்ட நாடாளுமன்றப் பேரவை ஏற்படுத்தப்படும். அப்பேரவையில் பிரதமர்,அவரது பிரதிநிதி,எதிர்க்கட்சித் தலைவர் அவரின் பிரதிநிதி மற்றும் சபாநாயகர் மட்டுமே இருப்பர். முன்பு வெளியில் இருந்தும் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் அல்லாதோரும் இருக்க முடிந்தது. ஆனால் வெளியார் யாரும் நாடாளுமன்ற பேரவையில் உறுப்பினராக இருக்க முடியாது.அது மட்டுமல்ல இவர்கள் சனாதிபதிக்கு ஆலோசனை வழங்கலாமே தவிர வேறு நியமனங்களைச் செய்யும் அதிகாரங்கள் அற்றவர்களாகவே இருப்பர். சுயாதீனக் குழுக்களின் தலைவர்களை சனாதிபதியே நியமிக்கலாம். நாடாளுமன்றப் பேரவை தங்கள் அவதானிப்புகளை மாத்திரமே தெரிவிக்க முடியும் என்று திருத்தம் கூறுகிறது. சட்டமா அதிபர், கணக்காளர் நாயகம் ஆகியோரை நியமிக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு வழங்கப்படும். அதேபோல் இலஞ்ச ஊழல் ஆணைக் குழு, கணக்காளர் சேவை ஆணைக்குழு, ஆகியன முற்றாக நீக்கப்படும். தேர்தல் ஆணைக் குழுவின் அதிகாரங்கள் குறைக்கப்படும் என்பன முக்கிய திருத்தங்களாம். இவ்வாறு திருத்தங்கள் கொண்டு வந்ததன் மூலம் சனாதிபதியிடம் முன்னரிலும் பார்க்கக் கூடிய அதிகாரங்கள் கொடுக்கப்படுவதாகத் தோற்றம் பெறுகிறது.

பத்தொன்பதாவது திருத்தத்தின் படி சனாதிபதிக்கு அமைச்சுக்களை வைத்திருக்கும் அதிகாரம் இல்லாமற் செய்யப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது அது நீக்கப்பட்டு அவர் தனக்கு விரும்பிய அமைச்சுகளை வைத்திருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. பிரதம மந்திரியின் ஆலோசனைக்கமையவே அமைச்சரவை இருக்கும் என்றாலும், "பிரதமரின் கருத்தை ஏற்காமல் அமைச்சர்களை மாற்றவும் சனாதிபதியால் முடியும்," என்று கூறுகிறது இப்போதைய திருத்தம்.,

அடிப்படை உரிமை மீறல் பற்றியும், அடிப்படை மனித உரிமை மீறல் பற்றியும் சனாதிபதியை விசாரணைக்கு உட்படுத்த முடியும் என்பன நீக்கப்பட்டு, அவரை எந்த விசாரனைக்குள்ளும் கொண்டு வர முடியாது என்று திருத்தம் கூறுகிறது.. இவ்வாறு பல வழிகளிலும் சனாதிபதியின் அதிகாரங்கள் கேள்விக்குட்படுத்த முடியாத நிலையே காணப்படுகிறது.

பத்தொன்பதன் மூலம் மீட்கப்பட்ட சனநாயக உரிமைகள் மீண்டும் இருபதாவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதிக்கே வழங்கப்படுவது கோத்தபாயாவின் குடும்பச் சர்வாதிகார ஆட்சி முறைக்கே வழிவகுக்கும் என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. ஆனால் இங்கு சனநாயகம் பற்றியும், சர்வாதிகாரம் பற்றியும் பேசுபவர்கள் ஜேஆர் நாடாளுமன்றத் தேர்தலையே நடாத்தாமல் செய்த சர்வாதிகாரத்திற்கு ஆதரவளித்த வர்கள் தான். 1977 இல் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த ஜேஆர், அடுத்து 1982இல் நடைபெற வேண்டிய பொதுத் தேர்தலை நடாத்தாமல், "பொது மக்கள் கருத்துக் கணிப்பு" என்று கூறி ஒரு தேர்தலை நடாத்தி நாடாளுமன்றத் தேர்தலை நடாத்தாமல் மேலும் ஐந்து ஆண்டுகள் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சி நடத்தியவர். அந்த சனநாயகப் படுகொலையை இப்பொழுது கோத்தபாயாவும் செய்ய முயற்சிக்கலாம். அப்படியாயின் அதற்கு வித்திட்டது மட்டுமல்லாது, முன்மாதிரியாகச் செயற்பட்டவர்களும் ஐக்கிய தேசியக் கட்சியினரே ஆவர்.
இதை விட இன்று நாடாளுமன்றத்தில் இருக்கும் உறுப்பினர்களில் இருபத்தேழு பேர் பதினேழாவது திருத்தத்திற்குப்பின்னர் பதினெட்டாம் திருத்தத்திற்கும், அடுத்துப் பத்தொன்பதாவது திருத்தத்திற்கும் ஆதரவு கொடுத்தவர்கள் என்பதுடன் இப்பொழுது இருபதாவது திருத்தத்திற்கும் ஆதரவு கொடுக்கிறார்கள்.. இவ்வாறு கொள்கைகள் அற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட நாடாளு மன்றத்தில் தாம் விரும்பியவாறு திருத்தங்களை நிறைவேற்றுவதில் சிக்கல்கள் ஏற்படப்போவதில்லை.நாடு எத்தகைய ஆட்சிக்குள் சென்றாலும் அக்கறைப்படாத அரசியல் பக்குவமின்மை என்பது நாட்டை எங்கு கொண்டு செல்லுப்போகிறது என்று கூறவேண்டியதில்லை.

பிந்திய செய்திகளின் படி ஆளும் கட்சிக்குள்ளும் இத்திருத்தத்திற்குச் சில எதிர்ப்புகள் இருப்பதாகவும் அவற்றை ஆய்வு செய்யப் பிரதமர் ஒரு குழுவை நியமித்திருப்பதாகவும் தெரிகிறது.எனவே இருபதாவது திருத்தம் என்பது நாடாளுமன்றத்திற்கு வரச் சிறிது தாமதமாகலாம்.

அதன் பின்னர் என்ன வடிவத்தில் என்ன என்ன திருத்தங்களுடன் அது வரும் என்று பொறுத்திருந்து பார்க்கலாம்.ஆனால் ஒன்று மட்டும் உறுதி. அதாவது அரசியல்வாதியின் சிந்தனையிலிருந்து மாறுபட்ட இராணுவ அதிகாரச் சிந்தனை கொண்டதாகவே அது இருக்கும்.

# கவனமாக செயற்படுங்கள்...!

## காலம் உங்களை கண்காணிக்கிறது!

- குருபார்வை -

தேர்தல் பின்னடைவு தந்த பேரதிர்ச்சி மற்றும் வவுனியா மத்திய குழுக்கூட்டத்தில் எதிர்கொள்ள நேர்ந்த அசம்பாவிதங்கள், கூட்டமைப்பு, தமிழரசுக்கட்சி இரண்டுக்குள்ளேயும் நிகழ்ந்து வரும் உள்ளக கருத்தியல் முரண்பாட்டு மோதல்கள் எல்லாம் அடுத்தடுத்து ஏற்படுத்தியுள்ள மன உளைச்சல்கள் யாவும் சம்பந்தன் ஐயாவை பெருமளவு தளர்ச்சியடைய வைத்துள்ள நிலை தன்னையும் கட்சியையும் மீளவும் கட்டமைத்துக் கொள்வதற்கான புற மற்றும் அகச் சூழலை வலுப்படுத்திக் கொள்ளும் வகையிலான மூலோபாயங்களை வகுப்பதில் மௌனமாகவும் அதேசமயம் தீவிரமாகவும் இயங்கிவருவதாக கூட்டமைப்பின் முக்கியஸ்தர் காதோடு காதாக சொல்லி வைத்தார்.

இதேவேளை தமிழரசுக் கட்சியின் செயலாளர் பதவியில் இருந்து துரைராஜசிங்கம் அவர்கள் பதவி விலகியுள்ள நிகழ்வும் நடந்தேறியுள்ளதுடன் தமிழரசுக் கட்சியை அழிவிலிருந்து பாதுகாத்து மீட்டெடுக்க சுமந்திரனை கட்சியில் இருந்து நீக்குங்கள் என அதற்கான ஆதார காரணங்களோடு கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் கே.வி தவராசா வலியுறுத்தியுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளமையைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். இந்த நிலைமையை அவதானிக்கும் போது கூட்டமைப்புக்கும், தமிழரசுக்கட்சிக்கும் தற்போதைய ராகு - கேது பெயர்ச்சிப்பலன் நன்றாக இல்லை போலும் என ஒருவர் அரசியல் ஆரூடம் கூறி கூறுவது நகைச்சுவைக்காக இருந்தாலும் கூட, ஒருவேளை அப்படியும் இருக்கலாமோ? என்றும் எண்ணத் தோன்றுகின்றது.













எதுவானாலும் - கூட்டமைப்புக்குள் குழப்பம் தமிழரசுக் கட்சிக்குள் உள்ளக முரண்பாடு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்குள் மணிவண்ணன் விவகாரத்தால் சிக்கல், தமிழ் மக்கள் கூட்டணிக்குள் விக்கினேஸ்வரன் ஐயா நோக்கி தென்பகுதி பௌத்த சிங்கள இனவாதிகளால் விடுக்கப்படும் எச்சரிக்கைகள், மிரட்டல்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் தலைமைவருக்கும், பொதுச் செயலாளர் நாயகத்திற்கும் இடையிலான முறுகல் நிலைகள் - மறுபக்கம் அரசோடு ஒன்றி - ஒட்டி உறவாடும் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் ஆகியோருக்கிடையேயான மேலாதிக்கப் போட்டி என தமிழ் மக்களின் அரசியல் என்பது தண்டவாளத்தை விட்டு விலகிய தொடருந்து போல் தாறுமாறாக ஓட ஆரம்பித்துள்ளது என்றே கூறவேண்டும்.

புதிய ஜனாதிபதி, புதிய அரசு ஆகியவற்றின் பதவியேற்புகளின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் இந்த நாட்டின் சிறுபான்மையினத்தவருக்கு, குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு முன்னெப்போதையையும் விட எல்லாவிவகாரத்திலும் நம்பிக்கையீனம் தருவதோடு மட்டுமல்லாது, அச்சுறுத்தலாக, அவர்களின் எதிர்கால - இந்த நாட்டிலான - இருப்பை கேள்விக்குறியாக மாற்றியுள்ள அதேசமயம் தமிழ்த் தலைகளின் ஒற்றுமையீனத்தையும், ஒருங்கிணைந்த செயற்பாட்டுத் திறனின்மையையும் முரசறைந்து தெரிவிப்பதாகவும் உணர முடிகிறது. ஒருமுறை ஈழத்தின் தனிப்பெரும் கருத்தியல் சிந்தனையாளரும் கேலிச் சித்திரக் கலைஞருமான சிரித்திரன் சுந்தரிடம் ஒரு வாசகர் கேள்வியொன்றைக் கேட்டிருந்தார்.

கேள்வி : அதாவது - உலகத்திலேயே மிகவும் நகைச்சுவையான விடயம் எது?
சுந்தர் பதில் : "ஒற்றுமையில்லாத இனம். உரிமைக்காகப் போராடுவது தான் உலகில் நகைச்சுவையான விடயம்." என நெற்றிப் பொட்டில் அடித்தாற்போன்று பதிலளித்திருந்தார். இது வெளிப்பார்வைக்கு ஒரு சாதாரணமான பதிலாக இருந்தாலும் கூட, இது உள்ளடக்கியிருக்கும் அர்த்தமோ... பல செய்திகளை அழுத்தமாகச் சொல்வதாகவே உள்ளது. இந்தப் பதிலை ஆழ்ந்து யோசிப்பவர்களுக்கு அது உள்ளடக்கியுள்ள ஆதங்கம், வலி, ஏமாற்றம் மற்றும் எதிர்காலம் குறித்த அச்சம் ஆகியவற்றை புரிந்து கொள்ள முடியும்.

இப்பதிலை அவர் எழுதி கிட்டத்தட்ட நான்கு தசாப்பதங்கள், ஆகிவிட்டுள்ள நிலையிலும் இன்னும் நிலையை மாறவில்லை. இந்தக் காலப்பகுதிக்குள் தமிழ் மக்கள் வரலாறு காணாத ஒரு ஒப்பற்ற வியத்தகு உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தை நடத்திய பட்டறிவு அனுபவத்தைக் கொண்டவர்களாக இருந்த போதிலும் அந்த அனுபவ ஞானத்தின் வலுவை போர் மௌனித்துப் போய்விட்ட ஒரு தசாப்த காலத்திற்குள் எப்படி தொலைத்து விட்டு நிற்கிறார்கள் என்பதுதான் பெருந்துயர் தரும் விடயமாகும்.

உண்மையில் போர்க்கால பட்டறிவு அனுபவம் என்பது தமிழனத்தை மேலும் கம்பீரம் உடையவர்களாக ஆக்கியிருக்க வேண்டும் ஆனால் நடந்தது என்ன...? போராட்ட அரசியல் அனுபவம் கட்சி அரசியலை முன்னெடுக்க மீண்டும் ஆரம்பித்த போது நாற்காலிக் கனவுகளுக்காகவும், அதிகார அரசியல் அபிலாஷைகளுக்காகவும் மறக்கப்பட்ட விடயமானதில் போருக்குப் பின்னரான ஒரு தசாப்தகாலத்தில் அரசியல்வாதிகள் உரிமைகளைப் பதவிப் பவிசுகளுக்காக அடகு வைக்கத் தொடங்கிய அவலம் நிகழ்ந்தேறியது. அதன் விளைவையே அவர்கள் இப்போது அசிங்கமாகவும் அவமானத்துடனும் அறுவடை செய்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமையை, வாழ்வியல் இருப்பை சிங்கள பௌத்த மேலாதிக்க அதிகாரத்தால் முற்காக அழித்து விடக் கங்கணம் கட்டி நிற்கும் பேரினவாதிகளுக்கு அவர்களின் இலக்கை இலகுவாக எட்டிவிட இலகுவான பாதையினை இந்த தொலைநோக்குச் சிந்தனையும், ஆளுமைத் திறனுமற்ற தமிழ் அரசியல் தலைமைகள் வழிவகுத்துக் கொடுக்கும் நடவடிக்கைகளையே தமிழ் அரசியல் தலைமைகள் செய்து கொண்டிருக்கின்றன என்பதே உண்மை. விடுதலைக்காகவும், உரிமைகளுக்காகவும் அடக்குமுறைகளுக்கு எதிராக போராடிய இன்னமும் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு இனத்திற்கு எந்த வகையிலும் தலைமை தாங்கும் வல்லமை இவர்களுக்கு இல்லை என்பதையே இந்த கட்சி அரசியல் காலங்களின் பொறுப்பற்றதும், நகைப்புக்கிடமானதுமான செய்கைகள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

உள்வீட்டுச் செய்தி எல்லாவற்றையும் ஊர் அம்பலத்திற்கு உரைத்து, உரத்து, ஊழையிடும் இந்த உதவாக்கரைத் தலைமைகள், கலை கலாசார, பண்பாட்டு பெருமைமிகு ஒரு செம்மொழியை பேருடலையாக்கிக் கொண்ட இனத்தை மற்றவர்கள் கொச்சைப்படுத்தி, அவமதித்து, சவால்விட்டு அன்றாடம் அசிங்கப்படுத்தும் நிலைக் கொண்டுவந்து விட்டுள்ளமைக்கு இந்த ஏமாளித் தலைமைகளின் கோமாளித்தனமாக நடவடிக்கைகளே காரணம் என்பது இப்போது அனைத்துத் தரப்பாலும் வெளிப்படையாகவே பேசப்படும் விடயமாகிவிட்டது இந்தப் பேச்சுக்களின் எதிரொலியே கடந்த பொதுத் தேர்தல் தோல்விகள் மற்றும் பின்னடைவுகளில் எதிரொலித்தது.

ஒரு பெருந்தோல்வியை சிறு பின்னடைவாக மட்டும் கருதிக் கருத்துக்களைப் பரப்பும் ஒரு சாராரும் ஒரு சிறு வெற்றியை பெரும் பாய்ச்சல் எனக் கூறி பெருமைப்படும் மற்றொரு கட்சியினரும் மக்களின் ஒரு சிறு அங்கீகாரம் கிடைத்ததுமே வாய்த்தர்க்க அரசியலில் ஈடுபடத் தொடங்கியுள்ள இன்னொருசாராரும், ஆட்சி அரசியலாளருக்கு முண்டு கொடுத்து பதவிக் கதிரைகளில் அமர்ந்து தமக்குள் மோதிக் கொள்பவர்கள் தமிழ்த் தேசியத்தை மக்கள் கைவிட்டுவிட்டார்கள், புலிகளின் கொள்கைகளை மக்கள் நிராகரித்து விட்டார்கள் எனச் சுயபிரகடனம் செய்வோருமாக தமிழர் தம் அரசியல் தலைமைகள் பம்மாத்து அரசியலில் பயணிக்கத் தொடங்கியுள்ளமையானது ஒரு நம்பிக்கையானதும் ஆரோக்கியமானதுமான அரசியல் எதிர்காலத்திற்கு உத்தரவாதம் அளிப்பதாக இல்லை. தன்னிச்சையாகவும் மக்கள் அபிப்பிராயங்களுக்கு மதிப்பளிக்காமலும், தொடரும் இவர்களின் அரசியல் செல்நெறி தமிழ் மக்களின் உரிமைசார் அரசியல் அபிலாஷைகளை அதல பாதாளத்துள் தள்ளப்போகிறது என்ற அச்சம் சகல மட்டங்களிலும் தோன்றியுள்ளது. இந்தத் தலைவர்கள் தத்தம் தலைவிதியை தாங்கள் கெடுத்துக்கொள்வது பற்றிக் கவலையில்லை தமிழ் மக்களின் தலைவிதியையும் அவலத்திற்குட்படுத்துவதை அனுமதிக்கக் கூடாது. இனவாத, அரசியலை, மதவாத ஆட்சியை முன்னெடுக்க மூர்க்கத்துடன் முனைந்து வரும் தென்னிலங்கை பேரினவாதிகளின் நீண்டநாள் அபிலாஷைகளை சுலபமாக நிறைவேற்ற உதவுவதாகவே அது அமையும் எனவே தமிழ் மக்கள் சிங்கள- தமிழ் அரசியல் தலைமைகளின் அனைத்து நகர்வுகளையும் மிகவும் உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய காலகட்டம் இதுவாகும். இப்போது தமிழ்த்தலைமைகளுடன் ஏற்பட்டிருக்கும் போட்டி அரசியல் உத்திகள் மக்கள் எதிர்பார்க்கும் ஒற்றுமை அரசியல் முன்னெடுப்புகளை நிராகரிப்பதாகவே உள்ளன. வெளியே மக்கள் மத்தியில் ஒருங்கிணைந்த அரசியல் பற்றி பேசி ஒருவருக்கு ஒருவர் அறிக்கை விட்டுக் கொண்டிருப்பது வெறுமனே மற்றொரு வகையிலான ஏமாற்றுத் தந்திரோபாயம் என்றே கூறவேண்டும். இல்லையெனில் 19 ஆம் திருத்தச் சட்ட நீக்கம் 20 திருத்தச் சட்ட நிறைவேற்றம், 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான குழப்பம் ஆகியவை குறித்து ( இவைகள் தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் அவர்கள் அரசியல் உரிமைகள் தொடர்பான விடயங்களில் தன்மைப்படக்காவிடினும் கூட ஒருமித்த நிலையில் ஒரு கருத்தியல் முடிவுக்கு வந்திருக்கலாமல்லவா, விக்கினேஸ்வரன் அவர்களின் உரைகள் தொடர்பாக நாடாளுமன்றிலும், அதற்கு வெளியேயும், மிரட்டும் தொனியிலும் எச்சரிக்கும் வகையிலும், அநாகரிகமாகப் பேசப்பட்ட பேச்சுக்களுக்கும், விடுக்கப்பட்ட அறிக்கைகளுக்கும் காத்திரமான ஒன்றிணைந்த எதிர்ப்புக்குரலையோ கண்டனத்தையோ வெளியிட்டு இனத் தனித்துவ ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தி ஒரு அரசியல் நாகரீகத்தை வெளிப்படுத்தி இருக்கலாமல்லவா? அதுதான் கிடக்கட்டும் அது உங்கள் பரவிணிக்குணம் என்று விட்டுவிட்டாலும் கூட அண்மைக் காலங்களாக சரத் வீரசேகர, சரத் பொன்சேகா, கமல் குணரத்னா, சவேந்திர சில்வா மற்றும் இனவாத வெறி பிடித்த தேரர்கள் மற்றும் சில அரசசார்பு அரசியல் பிரமுகர்கள், அமைச்சர்கள் போன்றோர் தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழர் கலாச்சாரம் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக விடுத்துவரும் கருத்துக்களுக்கும், அறிவிப்புகளுக்கும் கூட ஒரே குரலில் எதிர்ப்பையோ கண்டனத்தையோ வெளியிடும் பண்பு கூட, துணிச்சல் கூட, மான உணர்வு கூட இல்லாத தலைமைகளிடம் தமிழ் மக்கள் எதனைத் தான் எதிர்பார்க்க முடியும்? இந்த லட்சணத்தில் முள்ளிவாய்க்காலில் சாத்தியப்பிரமாணம் தியாகி திலீபன் நினைவிடத்தில் சத்தியப்பிரமாணம், என்று பிரசாரம் செய்தபடி பெரும் தேசிய உணர்வாளர்களாக காட்டிக் கொள்ள முண்டியடிப்பதான் கவலை தரும் விடயம். முள்ளிவாய்க்காலில் முடிவடைந்த போரின்போது மரணித்து தம்மை மக்களின் விடுதலைக்காக ஆகுதியாக்கிக் கொண்டவர்களும் சரி, ஏன் 13 ஆவது திருத்தச்சட்டத்தில் நியாயமான தமிழர்களின் உரிமைப் பிரச்சினைக்கு உத்தரவாதமான எந்தத் தீர்வையும் முன்வைக்காத இந்திய வல்லாதிக்கத்திடம் நியாயம் கோரி உண்ணாநோன்பிருந்து இந்தியாவின் சுயத்தை அம்பலப் படுத்திவிட்டு தற்கொடையாளனாக தன்னையே அழித்துக்கொண்ட தியாக தீபம் திலீபனும் சரி உங்களையும் உங்களின் அரசியல் அபிலாஷைகளையும் நன்கு அறிந்திருந்தார்கள் என்பதே உண்மை.

மக்களுக்காக அவர்கள் தம்மை உயிராரப்பணம் நீங்களெல்லாம் எங்கு, எந்த அணியில் இருந்து கொண்டு மௌனம் காத்திருந்தீர்கள் என்பதையும் கூட உணர்வுள்ள மக்கள் அனைவரும் நன்றே அறிந்தும் உள்ளனர். வரலாறும் அதைப் பதிந்தே உள்ளது. மக்கள் சில வேளைகளில் அவற்றையெல்லாம் மறக்கலாம் அல்லது மன்னிக்கலாம். ஆனால் வரலாறு உங்களை மறக்கவும் போவதில்லை, மன்னிக்கவும் போவதில்லை. ஆகவே இனிமேலாவது தியாகிகளையும், போராளிகளையும் மாவீரர்களையும் பிரசார சாதனங்களாக்கி அரசியல் பிழைப்பினை மேற்கொள்ளும், ஈனத் தொழிலை கைவிட்டு விட்டு ஏதாவது ஆக்கபூர்வமாகச் செய்யமுன்வாருங்கள்.

காலமும், மக்களும் உங்களைக் கண்காணித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

# சுமந்திரனின் முற்போக்குச் சக்திகளும் இருபதாவது திருத்தமும்.

- மாசிலான் -



இருபதாவது திருத்தம் சர்வாதிகாரத்திற்கு வழி வகுக்கிறது. அதுவும் ஒரு குடும்பச் சர்வாதிகாரத்திற்கு வழி கண்டுள்ளது என்று ஆட்சியாளர் தவிர்ந்த அனைவரும் கூறுகின்றனர். 1978 ல் ஜே.ஆர் இன் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசால் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சியமைப்பை மீண்டும் இப்பொழுது கொண்டு வந்துள்ளார்கள் இன்றைய ஆட்சியாளர்கள். அதாவது 1978 முதல் 2018வரை இருந்த ஆட்சி முறை தான் இரு ஆண்டுகள் இடை வெளிக்குப் பின்னர் மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளது என்பது தான் உண்மையாகும். அதாவது பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் இத்திருத்தத்தின் மூலம் சனாதிபதியிடம் கொடுக்கப்படுகிறது.

“ஜேஆர் கொண்டுவந்த அந்த அரசியல் யாப்பினைத் திருத்தி மீண்டும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரங்களைக் கொடுப்போம்,” என்று சொல்லி ஆட்சியைப் பிடித்த சனாதிபதிகள் எவரும் அதில் அக்கறை காட்டாது நிறைவேற்று அதிகாரப் பதவிச் சுகத்தை அனுபவித்தவர்களே ஆகும். இந்நிலையில் தான் மைத்திரி பால சிறிசேன பத்தொன்பதாவது அரசியல் யாப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்து ஓரளவு அதிகாரங்களை நாடாளுமன்றத்திற்கு வழங்கினார். அதன் பின்னர் “தான் ஏமாற்றப்பட்டு விட்டதாகவும், பத்தொன்பதாவது அரசியல் யாப்புத் திருத்தன் மூலம் நீக்கப்பட்ட சில அதிகாரங்களை மீண்டும் சனாதிபதிக்கு வழங்க வேண்டும்.” என்று கூறியிருந்தார்.

இப்பொழுது நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பின்பு இருபதாவது திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. அதில் பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் குறைக்கப்பட்ட சனாதிபதியின் அதிகாரங்கள் மீண்டும் சனாதிபதியிடன் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் “இத்திருத்தச் சட்டத்தின் மூலம் சனாதிபதி சர்வாதிகாரியாகிறார், குடும்பச் சர்வாதிகாரம் வரப்போகிறது.” என்று பலரும் உரத்த குரலில் சத்தமிடுகிறார்கள். அது உண்மைதான், என்றாலும் இதுவரை இருந்த அதிகாரங்களையே இப்பொழுது மீண்டும் கோத்தபாய ஆட்சி கொண்டு வந்துள்ளது என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே!

“இந்த இருபதாவது திருத்தம் சர்வாதிகாரத்தைக் கொண்டு வந்து விடும்,” என்று கூறி வருகின்ற நிலையில், தமிழ் மக்களின் நிலைமையில் இந்தத் திருத்தம் எத்தகைய பாதிப்பைக் கொடுக்கும்? என்பது தனித்துப் பார்க்கப்பட வேண்டியதே ஆகும். ஏனெனில் சிங்கள மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு என்பது வேறு, தமிழ் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு என்பது வேறாகும்.. ஏதேச்சதிகார ஆட்சியை நடத்தும் இன்றைய ஆட்சியாளர்களுக்கு இத்திருத்தம் மேலும் சில சட்ட வலுவான அதிகாரங்களைக் கொடுக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லைத்தான். ஆனால், ஜே.ஆர் புதிதாக 1978இல் இந்த அரசியல் யாப்பைக் கொண்டு வருவதற்கு முன்னர் தான் தமிழ் மக்களின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு வந்தன என்ற வரலாற்றுப் பதிவை நாம் மறந்து விட முடியாது.தமிழ் மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது முதல் 1972 ஆம் ஆண்டு குடியரசு யாப்பு நிறைவேறியது வரை தமிழ் மக்களின் உரிமைகள் சனநாயக அமைப்பான நாடாளுமன்றத்தால் தான் பறிக்கப்பட்டன என்பது தான் உண்மை. சனநாயகம் என்ற போர்வைக்குள் இருந்து கொண்டும் தமிழ் மக்களை அடக்கும், அழிக்கும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட காலம் அதுவாகும். சனநாயாக சர்வாதிகாரம் தான் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டது. எனவே இருபதாவது திருத்தத்தால் நாடு சனநாயகத்தை விட்டுச் சர்வாதிகாரத்திற்குச் செல்வதால் தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு விடும் என்று கூறுவதால் சனாயகத்தின் பெயரில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கொண்டு வந்து நிறை வேற்றப்பட்ட சட்டங்களின் பாதிப்பு குறைவானது என்று கூற முடியுமா?

உண்மையில் சனநாயகத் தின் பெயரில் அனைத்துச் சிங்களத்துக் கட்சிகளும் தமிழ் மக்களின் முழு உரிமைகளையும் தான் பறித்தன. இடது சாரிகள் என்று கூறியவர்கள் தான் குடியரசு யாப்பைத் தயாரித்துத் தமிழினத்தை நிரந்தரமாக, இரண்டாந்தரக் குடிமக்களாகக் கொண்டு வந்தவர்கள். எனவே சனநாயக ஆட்சியோ, சர்வாதிகார ஆட்சியோ தமிழ் மக்களுக்குப் பாதமானதாகவே இருக்கும் என்பது தான் உண்மையாகும். தமிழ் மக்களே பூர்வீகக் குடிகள் என்று பேசுவதையோ தமிழ் தொன்மையான மொழி என்று பேசுவதையோ எதிர்க்கட்சி தானே மிக மோசமாக எதிர்த்துக் கருத்துரைத்துள்ளது. அதாவது ஆளும் கட்சியானாலும் எதிர்க்கட்சி ஆனாலும் தமிழ் மக்களின் உண்மை வரலாற்றை ஏற்றுக்கொள்ளாத நிலைதான் இங்குள்ளது. எனவே இங்கு இருபதாவது திருத்தம் வரும்பொழுது தமிழ் மக்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டுவது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது என்றாலும், சுமந்திரன் கூறுவது போல் தென்னிலங்கை முற்போக்குச் சக்திகளுடன் இணைந்து இறுதி வரை எதிர்ப்போம் என்பது ஏற்புடையதாகுமா?

முதலில் முற்போக்குச் சக்திகள் என்பதன் பொருள் என்ன? என்று சுமந்திரனோ கூட்டமைப்போ தெளிவுபடுத்த வேண்டும்.. ஆட்சி அதிகாரத்திற்குப் போட்டிபோட்டு எதிர்க்கட்சியில் இருக்கும் சஜித் பிரேமதாசாவின் ஐக்கிய மக்கள் சக்தியோ, அல்லது தேசிய மக்கள் சக்தி எனப்படும் ஜேவிபியோ முற்போக்குச் சக்திகள் என்ற தகுதி உடையனவா? ஆனால் இவற்றைத்தான் முற்போக்குச் சக்திகள் என்று கூறுகிறது கூட்டமைப்பு. இவ்வமைப்புகள் இருபதாவது திருத்தத்திற்கு எதிராகப் போராட்டங்களை மேற்கொண்டால் கூட்டமைப்பும் அதில் இணைந்து கொள்ளுமா? சுமந்திரன் இறுதிவரை எதிர்ப்போம் என்று கூறுவது அவ்வாறு கலந்து கொள்ளும் நோக்கத்தில் தான் என்று எண்ணத் தோன்றுகிறது. இதுவரை தமிழ் மக்களில் காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்திலோ, சிறைக் கைதிகள் விடுவிப்புப் போராட்டங்களிலோ, காணி விடுவிப்புப் போராட்டங்களிலோ பங்குபற்றாத கூட்டமைப்பு அரசியல் யாப்புத் திருத்தத்திற்கு எதிரான போராட்டத்தில் பங்கு பற்றுமா? இருபதாவது திருத்தத்திற்கு எதிரான போராட்டத்தில் பங்கு பற்றுவதால் தமிழ் மக்கள் இழந்த உரிமைகள் மீட்கப்படுமா? இவை எதுவுமே நடைபெறப் போவதில்லை.. சனநாயகம் மீட்கப்படும் என்று மட்டும் தான் சொல்வார்கள், சொல்ல முடியும். ஆனால் தமிழ் மக்களுக்கான சனநாயகம் அங்கு கிடைக்கப் போவதில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த நாட்டிலே சனநாயகம் என்பது என்றுமே இருந்ததில்லை. பெரும்பான்மை இனம் விரும்புவது தான் சட்டம் என்றிருக்கும் வரை சனநாயகம் என்று கூறுவது ஒரு கேலிக் கூத்தான சொல்லாகவே இருக்க முடியும்.. இதைத் தான் காலம் சென்ற மு. திருச்செல்வம் கியூ.சி பின்வருமாறு கூறுகிறார். “1972இன் அரசியலமைப்பைத் தமிழ் நாட்டினம் ஏற்றுக்கொள்ளாவிழனும் தமிழ் நாட்டினத்தின் இறைமை பிரிட்டிசாரிடமிருந்து மீளப்பெறப்பட்டது. இது ஒரு புதுமையான சூழல், புதுமையான நிகழ்வு. உலகில் வேறெங்கும் நிகழாத ஒன்று. இலங்கைத் தீவில் வாழ்கின்ற தமிழ் நாட்டினத்தின் இறைமை அவர்களுடையதாயுள்ளது எனினும் அந்த இறைமையைப் பயன்படுத்தும் ஆட்சியுரிமை அவர்களுடையதாக வில்லை, இது புதுமை”

இக்கூற்றிலிருந்து என்ன தெரிகிறது? என்றால் இலங்கையின் ஆட்சியாளர்கள் எவராக இருந்தாலும் தமிழ் மக்களின் சனநாயக உரிமைகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பது தான். எனவே இலங்கையின் சனநாயக ஆட்சி முறை என்பது தமிழ் மக்களுக்கானது அல்ல. “சனநாயகத்தைக் காப்பாற்றுவோம்.” என்று சொல்வது சிங்கள மக்களின் சனநாயகத்தை மீட்பதற்கான ஒன்றே அல்லாமல் தமிழ் மக்களுக்கானதல்ல என்பதை மறந்து விடக்கூடாது. இப்பொழுது சனநாயகத்தை மீட்டு விட்டால் சுமந்திரன் கூறும் முற்போக்குவாதிகளான சஜித் அணியினரோ, ஜேவிபி யினரோ காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டங்களில் பங்கு பற்றி நீதி கோருவார்களா? சிறைக் கைதிகளை விடுதலை செய்யச் சொல்லிக் குரல் கொடுப்பார்களா?

அவர்களுக்கு இவை பிரச்சினையேயில்லை. அவர்கள் இதைப் பற்றிப் பேசப் போவதுமில்லை. ஆனால் நாங்கள் தான் அவர்கள் சர்வாதிகார ஆட்சிக்குள் துன்பப்படப் போகிறார்கள் என்று கவலைகொண்டு, அவர்களுக்காகக் குரல் கொடுக்கவும், போராடவும் போகிறோம்.ஆனால், சுமந்திரன் கூறும் “முற்போக்குச் சக்திகள் தமிழ் மக்கள் தொடர்ந்தும் அடக்கப்பட்ட இனமாகவே உள்ளார்கள்” என்று இப்பொழுதாவது ஏற்றுக்கொள்வார்களா என்றால் இல்லை என்பதுதான் உண்மையான நிலையாகும்.

சர்வாதிகாரத்திற்கெதிரான முற்போக்குச் சக்திகளுடனான கூட்டமைப்பின் இணக்கம் அரசியல் யாப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்க உடன்படுமா?அது தானே தமிழ் மக்களின் சனநாயகக் குரல் வளையை நெரித்துக் கொண்டிருக்கும் ஒரு முக்கியமான விதி. அத்துடன் பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னொரு கொடுமையான சட்டம். இவற்றை நீக்குவது தான் தமிழ் மக்களுக்கான சனநாயகத்தின் முதல் படியாக இருக்க முடியும். இவற்றைப் பற்றிய சிறு விட்டுக்கொடுப்புகளையும் செய்யாத, சுமந்திரன் குறிப்பிடுகின்ற, “முற்போக்குச் சக்திகளுடன் இணைந்து கடைசி வரை போராடுவோம்.” என்று கூட்டமைப்புக் கூறுவது தமிழ் மக்களுக்கு எந்த வித பலனையும், நன்மையையும் தரப்போவதில்லை. சனநாயம் என்ற போர்வைக்குள் இருக்கும் சர்வாதிகாரமும், தனி ஒருவரினதோ, குடும்பத்தினதோ சர்வாதிகாரம் என்பதும் தமிழினத்தைப் பொறுத்தவரை ஓரளவு சம அளவுடையதாகவே இருக்கும்.

# ஒரு தியாகம் சோதனைக்குட்படுத்தப்படுகிறதா..?

- முகுந்தன்

தற்போது அது பற்றிச் சிந்திப்பதில் பயனில்லை. காலங்கடந்த முயற்சி இது. இங்கு. பெரும்பான்மை மக்களே அரசைத் தீர்மானிக்கின்றதாகச் சூழ்நிலை அமைந்துவிட்டது. இராணுவ அதிகாரிகளாகக் கடமையாற்றிய பலர் அரச அதிகாரத்தில் அமர்தப்பட்டிருக்கிறார்கள். சிறுபான்மை மக்களின் ஆதரவு தமக்குத் தேவை இல்லை என ஆட்சியாளர் கருதும் பட்சத்தில், சிறுபான்மையினர் நீதி நியாயத்தோடு நடத்தப்படுவார்கள் என்றது கேள்விக்குரிய விடயமே. எனவே இங்கு ஜனநாயகம் என்ற விடயம் என்றும் கேள்விக் குறியாக மட்டுமே இருக்கும் என்ற அடிப்படை அறிவைப் பெற்றிராத தலைமைகளைக் கொண்டவர்களாக நாம் இருக்கிறோம். இனியும் சாத்வீகத்தை நம்புவதா? வெட்கித் தலை குனியக் கூடிய விடயம் இது.

திலீபனின் தியாகம் மீண்டும் ஒருமுறை சோதனைக்குட்படுத்தப்படுகிறதா? அவனையும், அவனது பெறுமதிமிக்க தியாகத்தையும் நினைவு கூர அரச நீதிமன்றங்கள் தடைவிதித்திருக்கின்றன. அஞ்சலி செலுத்தச் சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். வடக்கு - கிழக்கு எங்கிலும் நினைவுகூரத் தடை.. தடை.. தடைபோடப்பட்டிருக்கிறத.

இதுவரை அது பற்றிப் பேசாதிருந்தவர்கள், தடை வந்தபின் அதனை எப்படி எதிர்கொள்வது? என்றதைத் தீர்மானிக்க யாழ். இளங்கலைஞர் மண்டபத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை தலைமையில் ஒன்று கூடி இருக்கின்றனர். எதிர்வரும் வெள்ளிக் கிழமை மீண்டும் பல தரப்பட்டவர்களோடு கூடிக் கலந்து ஆலோசித்து இதனை வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு பொது எதிர்ப்பாகக் காட்ட வேண்டும் என்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் விருப்பம்.

“கோத்தாபய அரசுக்கு எதிராகச் சாத்வீக நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறார்களாம். இவர்கள் செயற்பாடுகளை உற்று நோக்குமிடத்து, மீண்டும் சைபரிலிருந்து தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கப் போவதாகத் தெரிகிறது. 1948 தொடக்கம் நடைபெற்ற சாத்வீகப் போராட்டங்களால் சாதிக்க முடியாது போனவற்றையா இவர்கள் சாதிக்கப் போகிறார்கள்? என்று வினாவும் எழுப்பப்படுகிறது. பெரும்பான்மை இனவாத அரசில்வாதிகளுக்கு “சாத்வீகம்” ஒரு புரியாத மொழி என்றதைத் தலைவர் மாவை மறக்கலாகுமா? அவர்களுக்குப் புரியக் கூடிய பாஷை எது என்பதைத் தந்தை செல்வா அவர்கள் எப்போதே தீர்மானித்துச் சொல்லிவிட்ட பின்பு, இன்னும் இவர்கள் இது போன்ற சாத்வீகத்தில் நம்பிக்கை வைத்துப் பேசுவதில் நியாயமில்லை என்று தோன்றுகிறது. பேசவேண்டிய எத்தனையோ அரசியல் சந்திகளைச் சந்தித்தவர்கள் கூட்டமைப்பினர். இருந்தும், அங்கு நின்று கொண்டு திரும்ப வேண்டிய சரியான திசை எது வென்று அறிந்திருந்தும், அத்திசை நோக்கித் திரும்பாது, தமது சுய நலனுக்காகவும், இந்திய அரசியலின் நன்மையை முன்னிலைப்படுத்தியும் திசை மாறிச் சென்றவர்கள். இவர்கள் பேரம்பேச வேண்டிய சந்தர்பங்களை எப்படிக் கோட்டை விட்டார்கள் என்றதை அறிய, நல்லிணக்க அரசு செயற்பட்ட காலத்தை ஒரு முறை பின்னோக்கலாம். அந்த நாலு வருடங்களும் மக்கள் நலன் கருதாது, தான் தோன்றித்தனமான முடிவுகளை எடுத்து, யாப்புருவாக்கம் என்ற போர்வையில் காலத்தைக் கடத்தியவர்களோடு கைகோர்த்து நின்று சாதித்ததுதான் என்ன?

இலங்கையின் தொடக்க அரசியல் கட்சி என்ற பெருமைக்குரிய ஐ.தே.க வைக் கூட நேர்த்தியாக வைத்திருக்கக்கூடிய அரசியல் ஆளுமையற்றவர் தான் எனத் தற்போது நிரூபித்திருக்கும் ரணிலின் வல்லமை என்ன என்று முன்கூட்டியே அறிய முடியாத அரசியல் சாணக்கியர்கள் இவர்கள். ஆனால் அவரோ இவர்களை இணைத்துக் கொண்டு தனது நலன்களைக் காத்துக்கொண்டார். அப்படிப்பட்டவரோடு இணைந்து அவர்கள் தேசிய நலன்களுக்காக விலைபோன கூட்டமைப்பினர் தமிழ் மக்கள் நலன்களைப் பற்றிச் சிந்திக்கத் தவறிவிட்டனர் என்றுதான் சொல்ல முடிகிறது. திலீபனின் தியாகத்தை நினைவுபடுத்துவதைத் தடை செய்கின்ற இலங்கை அரசை, தமிழ் மக்களின் ஜனநாயச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது என்ற அடிப்படையில் இந்திய அரசு ஊடாகத் தட்டிக் கேட்க முடியாதா? என்ற ஆதங்கத்தோடு ஒருவர் பேசினார். திலீபனின் தியாகத்தைக் கொண்டாடுவதில் இந்திய அரசுக்கும் உள்ள சிக்கலை அவருக்குச் சொன்னபோது அவரும் அதனை ஆமோதித்து ஏற்றுக் கொண்டார். திலீபனின் தியாகம் என்பது தமிழ் தேசிய நலனோடு மட்டும் ஒன்றித்ததல்ல. ஈழத்துத் தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் இந்திய அரசின் முகமூடியைக் கிழித்தெறிந்த நிகழ்வாகவும் காணப்படுகிறது. இந்திய அரசை இனிமேலும் நம்பக் கூடாது என்றதொரு உண்மையை தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, உலகத்துக்கும் தனது தியாகத்தால் எடுத்துச் சொன்னவன் திலீபன். எனவே திலீபனை நினைக்கும் தோறும் இந்திய அரசின் செயற்பாடுகளும், இந்திய அமைதிப்படையின் வருகையும், அவர்கள் நிகழ்த்திய பயங்கரவாதமும் தமிழ் மக்களின் மனதில் நிழலாடும் என்ற உண்மையை மறைக்க இந்தியாவும் விரும்பும். எனவே இந்த விடயத்தில் அவர்களும் மௌனமாக இருக்க விரும்புவர் என்பதே அவருக்கு அளித்த விடயம். எமக்காகத் தியாகம் செய்த ஒரு மனிதனை ஞாகப்படுத்தி அஞ்சலி செய்யக் கூடிய உரிமையைக் கூட நாம் இழந்திருக்கிறோம் என்பதே யாதார்த்தம் .இனிவரும் ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் இது போன்று தடை வரலாம். அரசின் செயற்பாடாக இல்லாது, சட்டங்களை அவற்றிற்கு எதிராகத் திசைதிருப்பக் கூடியவாறு சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். எனவே அதனை எப்படி எதிர்கொள்ளப்போகிறோம் என்பதுதான் இப்போதைய முயற்சியாக இருக்க வேண்டுமே ஒழிய சாத்வீகப் போராட்டத்தாலும், சுமந்திரன் கடந்த நான்கு வருடங்களாகப் பேசிவந்த மென் வலுவாலும் அரசைப் பணிய வைப்பது சாத்தியமா என்றதைப் பற்றியும் தலைவர் மாவை சிந்திக்க வேண்டும்.

அரசியலுக்காக மக்களைப் பயன்படுத்தினீர்கள். அதில் வெற்றிபெற்றதாக இல்லை. எனவே இனிமேல் மக்களுக்காக அரசியலைப் பயன்படுத்துங்கள்.அதுவே திலீபனின் தியாகத்துக்குச் செய்யும் கைமாறாக இருக்கும்.





# BRAIN CHIP
# மூளையில் சிப்

எழுத்துருவாக்கம் : ப. ராஜ்குலன்

கடவுள் எமக்கு வரமாகவும், சாபமாகவும், ஞாபக மறதி என்ற ஒரு விடயத்தைத் தந்திருக்கிறான். ..! பழைய நிகழ்வுகளை ஞாபகப்படுத்தி “அந்தக் காலம் மாதிரி வருமா?” என்று அடிக்கடி பலர் சொல்லக் கேட்டிருக் கிறோம். பழைய காட்சிகளை காணொளி போன்று நிழலாட வைக்கக் கூடிய தொழில்நுட்பம் இருந்தால் எப்படியிருக்கும்?.. ஆம் ஞாபக மறதியை இல்லாமல் செய்துவிடலாம் என எலன் மஸ்க் (Elan Musk) கூறியிருக்கிறார். அது மட்டுமல்லாமல் பார்வையற்றவர்களுக்குப் பார்வையைக் கொடுக்க முடியும்.




V1 Chip

வாய் பேசாதவர்களைப் பேசவைக்க முடியும்.. காது கேட்காதவர்களைக் கேட்க வைக்க முடியும்.. என அசாத்தியமான விடயங்களைச் சாத்தியமாக்கலாம் என்ற தனது நம்பிக்கையை அள்ளி வீசியிருக்கிறார். அது மட்டுமல்லாமல் புற்றுநோய், பக்கவாதம் உள்ளிட்ட வியாதிகளையும் பூரணமாகக் குணப்படுத்தமுடியும் என்றும் அவர் மேலும் எம்மை ஆச்சரியப்படுத்துகிறார்.

இவற்றையெல்லாம் படிக்கும் போது வியப்பாக இருப்பதோடு, நம்பமுடியாமலும் இருக்கிறதல்லவா?.. உண்மைதான். நாம் கற்பனைகூட செய்துபார்க்க முடியாத பலவிடயங்கள் இன்று சாத்தியமாகிக் கொண்டிருக்கின்றன. இவை தொடர்பான முயற்சியாளர் எலன் மஸ்க் அவர்களின் வேறொரு பக்கத்தை முன்பு பொலிவியா பற்றி எழுதிய கட்டுரையில் பார்த்திருக்கிறோம். ஆனால், இப்பொழுது அவரின் கற்பனையின் பிரதிபலிப்புக்கள் பற்றிப் பார்க்கலாம்.

நியூராலிங் (Neuralink) எனும் நிறுவனம் எலன் மஸ்க் அவர்களால் 2016 இல் தொடங்கப்பட்டது. ஏறக்குறைய 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை அந்நிறுவனத்துக்கு நன்கொடையாக வழங்குவதாகக் கூறினார்.

நியூராலிங்க் நிறுவனத்தில் விஞ்ஞானிகளை இணைப்பதற்குத் தான் முன்வருவதாக 2017ஆம் ஆண்டு டுவிட்டரில் அவர் அறிவித்தார். அதன்படி நியூராலிங்க் நிறுவனத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் விஞ்ஞானிகள் இணைந்து கொண்டனர்.

2018ஆம் ஆண்டுவரை நடைபெற்ற ஆராய்ச்சியின் பலனாக 2019இல் “வி வண்” (V1) என்னும் ஓர் சாதனத்தைக் கண்டுபிடித்துவிட்டதாகவும், அதனை ஓர் குரங்கில் பொருத்திப் பரிசோதித்ததாகவும், தற்போது அக் குரங்கு கணினியை இயக்கக்கூடிய ஆற்றல் கொண்டிருப்பதாகவும் எலன் மஸ்க் அறிவித்தார். மிகவும் சிறிய அமைப்பைக் கொண்ட அச் சாதனம் காதின் பின் பகுதியில் பொருத்தப்படும். அதிலிருந்து மயிரிழை போன்ற இணைப்புகள் மூளையில் பொருத்தப்படும்.

2020 ஆகஸ்ட் 28 அன்று, நியூரா லிங் குழு “என் வண்” (N1 - Version 2) எனும் புதிய சாதனத்தை உருவாக்கியிருப்பதாக எலன் மஸ்க் அவர்கள் மற்றுமொரு அறிவிப்பை வெளியிட்டார். ஏறத்தாழ 2 முதல் 4 மில்லிமீற்றர் விட்டத்தைக்கொண்ட அச்சாதானத்தில் வெளிப்புறமாக எந்தத் தொடுப்பும் இல்லை. கீழ்ப்புறமாக 1024 மயிரிழைகள் மூளையுடன் பொருத்தப்பட்டிருக்கும். அவ் இழைகள் எமது தலைமயிரைவிட 10 மடங்கு சிறியவை.

சிறிய சத்திரசிகிச்சை மூலம் மண்டை ஓட்டில். 0. 2 மில்லிமீற்றர் ஆழத்திற்குத் துளையிட்டு வெளியில் தெரியாத வகையில் பொருத்தப்படும். இதற்காகப் பிரத்தியோகமாக ஒரு எந்திரனையும் (Robot) கண்டுபிடித்துள்ளார்கள். அந்த ரோபோவின் உதவியுடனேயே பொருத்தப்படும். அந்த எந்திரன் ஒரு வகைத் தையல் இயந்திரம் போன்றது. மயக்க மருந்துகள் எதுவும் இல்லாமல் நடத்தப்படும் இச் சத்திர சிகிச்சைக்கு உடபடுத்தப்படுபவர் , காலை சென்று மாலைக்குள் வீடுதிரும்பிவிடலாம். அந்தக் கால இடைவெளியில் இந்தச் சாதனத்தைப் பொருத்திவிடுவார்கள். இதனை உருவாக்குவதற்கு "டார்ப்பா" (Darpa) என்னும் நிறுவனம் உதவியுள்ளது. இந்த நிறுவனமே 75 கோடி நுளம்புகளை உருவாக்கியுள்ளதாகச் செய்திகளில் படித்திருப்போம். அதே நிறுவனமே நியூரா லிங்குடன் இணைந்து இந்த எந்திரனையும் தயாரித்துள்ளது. வெளியில் எதுவும் தெரியாதவாறு அதன் 1024 வயர்களும் மூளையின் நரம்பு மண்டலத்தில் பதிக்கப்படும்.


N1 Chip Version 2.0


மூளையின் சமிக்ஞைகளின் அலைவரிசையை “அனலொக் சிக்னல்” (Analog Signal) என்றும், கணினியில் கிடைக்கும் சமிக்ஞைகளை “டிஜிட்டல் சிக்னல்” (Digital Signals) என்றும் சொல்லுவார்கள்.


மூளையுடன் பொருத்தப்பட்டுள்ள அந்த சாதனத்தில் அனலொக் சிக்னலில் இருந்து டிஜிட்டல் சிக்னலாக மாற்றக்கூடிய நிலைமாற்றி (Converter) அமைந்திருக்கும். மூளை மற்றும் நரம்பு மண்டலம் எப்படியான சிக்னலை வழங்குகிறதோ அதை அப்படியே இந்த சாதனம் டிஜிட்டல் சிக்னலாகத் தரும்.


அதுமட்டுமல்லாமல், ஊடலை (Bluetooth) வசதியும் அதில் உண்டு. இதன் வழியாகத் தரவுப் பரிமாற்றங்கள் நடைபெறும். அதாவது விவேக கைபேசியின் செயலி (Mobile App) மூலம் தரவுகள் பரிமாறப்படும். உதாரணமாக உங்கள் கைபேசிக்கு ஒரு அழைப்பு (Call) வந்தால், அதன் புளூடூத் வழியாக சாதனத்துக்கு வழங்கப்படும் சிக்னல் நரம்பு மண்டலத்திற்கும் அதன்வழி மூளைக்கும் அனலொக் சிக்னலாக மாற்றப்பட்டு வழங்கப்படும். உடனே அந்த அழைப்பை ஏற்றுப் பேசவேண்டுமெனின் மூளையின் கட்டளைப்படி அனலொக் சிக்னல் டிஜிட்டல் சிக்னலாக மாற்றப்பட்டு புளூடூத் வழியாக அந்த அழைப்பு ஏற்றுக்கொள்ளப்படும். (Call Attend). இதற்காக நாம் கையையோ, கண்களையோ பயன்படுத்தத் தேவை இல்லை. வாய்வழியாகவும் எந்தவொரு கட்டளையையும் கைபேசிக்கு இடத் தேவையில்லை. நாம் நினைத்தாலே போதும். பரிமாற்றங்கள் இடம்பெற்றுவிடும்.

இந்த சாதனத்தால் யாரெல்லாம் பயன்பெறப் போகிறார்கள்?

விழிப்புலனற்றவர்களுக்கு இதன்வழி பார்வையைக் கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கெனப் பிரத்தியேகமாகத் தயாரிக்கபட்ட கமெராவுடன் கூடிய தொப்பி ஒன்று உண்டு. அதை அணிந்தால் போதும்.






அதிலுள்ள 108 மெகா பிக்சல் கமெரா தான் பதிவுசெய்யும் அனைத்தையும் அனலொக் தரவுகளாக (Analog Data) மாற்றிக் காட்சிப் பதிவுகளாக அவரது நரம்புமண்டலத்திற்கூடாக மூளைக்கு வழங்கும். எனவே விழிப்புலனற்றவர்களும் பார்க்க முடியும். இதேபோன்று செவிப்புலனற்றவர்களுக்கும் கேட்கும் சத்தங்களை மூளை புரிந்துகொள்ளும்படி அனலொக் சிக்னலாக மாற்றிக் கொடுப்பதால் அவர்களாலும் கேட்க முடியும். நரம்பு மண்டலத்தின் மூலமாக இந்த சாதனத்தின் உதவியுடன் பலவிதமான நோய்களையும் கண்டறிந்து குணப்படுத்திவிட முடியுமென எலன் மஸ்க் கூறுகிறார்.

அதுமட்டுமல்ல, நாம் என்ன நினைக்கின்றோமோ அதை அப்படியே கணினியில் படமாக வரையக்கூடிய மென்பொருள் ஒன்றும் எதிர்காலத்தில் கிடைக்கும் என்றும் சொல்லப்படுகிறது.
உதாரணத்துக்கு, தியாகி திலீபன் அவர்களைப் பற்றி சிந்திதோமென்றால், மனதில் ஒரு காட்சி தோன்றும். பல வருடங்களுக்கு முன்பு நல்லூரான் வீதியிலே நடந்த சம்பவங்கள் ஒளிக்காட்சியாகத் தோன்றும். என்ன பேசுகின்றோமோ, எதைக் கேட்கின்றோமோ.. அவை அனைத்தும் காட்சிகளாக, என் வண் (N1) சாதனத்தின் உதவியுடன் "கிளவுட்" எனப்படும் மேகக்கணி சேமிப்பில் (Cloud Storage) சேமித்து வைக்கப்படும். என் வண் சாதனத்திலுள்ள 1024 வயர்களில் ஒவ்வொன்றும் 200 மெகாபைற் (MB) வேகத்தில் தகவலைப் பரிமாற வல்லன. 10 வருடம் கழித்தும் அந்தப்பதிவை அப்படியே நாம் காணமுடியும். மீண்டும், மீண்டும், மறுபடியும், மறுபடியும் அவற்றைப் பார்க்கமுடியும். சுப்பர் விசன் பவர் (Super Vision Power) எனப்படும் அதீத பார்வைத்திறன் கிடைக்கும். நாம் தெரியாத ஒரு பொருளைப் பார்க்கின்றோம் என்றால், அது என்ன என்பதைப் பற்றி கூகிளில் தேடவேண்டியதில்லை. பார்த்து இது என்ன என சிந்தித்தால் போதும், அதன் சிக்னல் கைபேசிச் செயலிக்குச் சென்று, அதுவே கூகிளில் தேடி, மீண்டும் நேரடியாகவே மூளைக்குத் தகவலைக் கொடுத்துவிடும். இந்தச் செயற்பாட்டிற்காக நாம் கைபேசியையோ, கணினியையோ பயன்படுத்தவேண்டியதில்லை.
இந்தச்சாதனம் இயங்க மின் சக்தி எவ்வாறு கிடைக்கும் என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம். மின்கலம் மூலமாகவே அச்சாதனம் இயங்குகிறது. அந்த மின்கலத்தின் மின்பாவனைக் காலம் ஒருநாள் மட்டுமே! அதை மறுபடியும் மின்னேற்றம் செய்ய வயல்லெஸ் சார்ச் (Wireless Charging) அமைப்பு விரைவில் கண்டுபிடிக்கப்பட்டு இதனுடன் இணைக்கப்படும் என அந்நிறுவனம் தெரிவித்திருக்கிறது. அவர்கள் இதனை மனிதர்களில் சோதித்துப் பார்ப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்கு, அமெரிக்காவின் எஃப். டி. ஐ (FDI) நிறுவனத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறார்கள். கடந்த ஆகஸ்ட் 28 அன்று தொலைக்காட்சி நேரலை ஒன்றில் , தமது சாதானத்தின் இயங்கு சக்திக்கு ஆதாரமாகப் பன்றி ஒன்றில் அச்சாதனத்தைப் பொருத்தி அதன் செயற்பாடுகளைக் காண்பித்தார்கள். பன்றியின் மூளையில் பொருத்தப்பட்டுள்ள சாதனத்தின் மூலம் அதன் செயற்பாடுகளின் போது அதன் மூளையின் சிக்னலை ஒளிபரப்பினார்கள். இந்த ஆய்வுக்காகப் பன்றியைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம், பன்றியின் மூளையின் அமைப்பு, மனித மூளையின் அமைப்பை ஒத்திருப்பதே. இவ்வகையான சாதனங்களைக் கண்டுபிடிப்பதால் பல நன்மைகள் உண்டு. அதேவேளை தீமைகளும் இடம்பெற வாய்ப்பிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இதில் புளூடூத் தொழில்நுட்பம் இருப்பதால் இதன் செயற்பாடுகளை இலகுவாக ஹாக் (Hack) செய்யமுடியும். யாருடைய உதவியுமின்றி இச் சாதனம் பொருத்தப்பட்ட நபரை அடிமையாகவும் நடத்தமுடியும். இருந்தும், பார்வையற்றவர்களுக்கும், செவிப்புலனற்றவர்களுக்கும் இதுவொரு வரமாக அமையலாம் என்று நம்பப்படுகிறது.
மனிதன் ஒரு படி மேலே போய் ஆடினால், இயற்கை மூன்று படி மேலே போய் ஆட்டுவிக்கும். எனக் கருட புராணம் சொல்லுகிறது. அதன் கூற்றுப்படி ???



# காற்று வாக்கிலே....

தென்னிலங்கை பேரினவாதத் தலைமைகளிலே காட்டாட்சி நடத்துகிறவர்கள் என்று எதிர்க்கட்சியால் விமர்சிக்கப்படுபவர்களும் சரி, நல்லாட்சிக் காரர்கள் எனத் தம்மை சொல்லிக் கொள்பவர்களும் சரி சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான விடயங்களில் குறிப்பாக தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினைகளில் ஒரே விதமான – பௌத்த சிங்கள இனவாதக் கண்ணோட்டத்திலேயே தமது கருத்தியல் நிலைப்பாட்டை கொண்டிருக்கிறார்கள் என்பதை இனிமேலாவது நல்லாட்சி கும்பலுக்கு முண்டு கொடுத்து காப்பாற்றிய தமிழ்த்தலைவர்கள் புரிந்துகொள்வார்களேயானால் நல்லது. அதாவது கூட்டமைப்புத் தலைவர்கள் சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் எவ்வளவு தொலைநோக்கு சிந்தனையற்றவர்கள் என்பதை அவர்களுக்கு வாக்களித்த அப்பாவித் தமிழ் மக்களும் தெளிவாக அறிந்து கொள்வது காலத்தின் கட்டாயமாகும். சம்பந்தன் சுமந்திரனை ஆதரித்து வாக்களித்த வரலாற்று தவறை இனிமேலும் செய்யாதிருக்க அது உதவும்.

நல்லாட்சி காலத்து தலைவர்களில் முக்கியமானவர்கள் தமிழ் மக்களின் உரிமை தொடர்பான விடயங்களில் எந்தளவுக்கு தமிழ்த் தலைவர்கள் தலையில் மிளகாய் அரைத்திருப்பார்கள் என்பதற்கு அப்போதைய நல்லாட்சிக் கால அமைச்சரும், தற்போதைய எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச அண்மையில் உதிர்த்திருக்கும் வார்த்தைகள் ஒரு உன்னத உதாரணம்.



நாட்டின் ஒற்றையாட்சிக்கும் இறையாண்மைக்கும் எவ்வித பாதிப்பும் இல்லாத 13 ஆவது திருத்தச் சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும். என்ற நிலைப்பாட்டில் தாம் இருந்தாலும் அதன் கீழான காணி, பொலிஸ் அதிகாரங்களை தமிழ் மக்களுக்கு வழங்க முடியாது என்ற நிலைப்பாட்டிலேயே தாம் இருப்பதாக – ஐயா சஜித் திட்டவட்டமாக கூறியுள்ளார். ஏக்கிய ராஜ்ஜியவுக்கு விசித்திரமான விளக்கம் சொன்னார் சுமந்திரன் ஐயா இதற்கு என்ன சொல்லப்போகிறார்.


காணி – பொலிஸ் அதிகாரமில்லாத மாகாண சபைகள் பலப்படுத்தப்பட வேண்டுமாம்...! இதுவும் சஜித்தின் தணியாத தாகம். தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்குவதில் சஜித் எவ்வளவு தாராள சிந்தையோடு இருக்கிறார் பாருங்கள்...!

இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாக மேல்நீதி மன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவர் 9 ஆவது பாராளுமன்றத்தின் உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்த முக்கிய நிகழ்வு கடந்த வாரம் நடந்தேறியுள்ளது. நடந்து முடிந்த தேர்தலில் பொதுசன பெரமுன கட்சியில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்டு விருப்பு வாக்கின் அடிப்படையில் தெரிவான பிரேமலால் ஜயசேகரா என்ற கொலைக் குற்றத்திற்காக மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதியே அந்த "சத்தியவான்" ஆவார்.

சிறைச்சாலையில் மரணதண்டனைக் கைதியா இருந்த இவரை பாராளுமன்றம் சென்று சத்தியப்பிரமானம் செய்வதற்கு சட்டமா அதிபதியின் உத்தரவின் பேரில் சிறைச்சாலை திணைக்களம் அனுமதி மறுத்திருந்தது. எனினும் இதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் இடைக்கால மனுவொன்றை தாக்கல் செய்த பிரேமலாலின் மனு குறித்து விசாரித்த நீதிமன்று அவரை சத்தியப்பிரமானம் செய்ய அனுமதிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தர விட்டது. இதனையடுத்து பலத்த பாதுகாப்புடன் அவர் சத்தியப்பிரமாணம் செய்ய அழைத்துச் செல்லப்பட்டார்.

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கிடையே இச்சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றமை மக்களிடையே ஒரு பேசு பொருளாகியுள்ளது. இதேவேளை 2010 இல் இராணுவ நீதிமன்றினால் 30 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு சத்தியப்பிரமாணமும் செய்திருந்த நிலையிலும் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்வது அவசியம். ஆகவே மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் தேர்தலில் தேர்வாகி சத்தியப் பிரமாணம் செய்த நிகழ்வு கடும் சர்ச்சைக்குள்ளாகி இருப்பதுடன் புதிய அரசின் ஆரம்ப நகர்வுகளே அதிருப்தி அளிப்பதாக பலரும் கருதுகின்றனர்.

அதுசரி... அடுத்து இவர் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவாரா என்பதே கேள்வி. இந்தக் கேள்வியை உரத்துக் கேட்டிருப்பவர் அதே பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவே தான்.



நிறைவேற்ற முடியாததையும், நிறைவேற்ற கூடாதவற்றையும் நிறைவேற்று அதிகாரம் நிறைவேற்றிக் காட்டவும் கூடும்.

அவ்வப்போது அதிர்ச்சிகரமாக ஆனால் அர்த்தமில்லாமல், பலவேளைகளில் நகைப்புக்கிடமானதாகவும் கருத்துக்கள் கூறுவதில் அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல்லவ மிஞ்ச ஆட்கள் கிடைப்பது அரிது. அமைச்சர் ஐயா அவர்கள் அண்மையில் பலகாலமாக யோசித்து காணாமல் போனோரது உறவுகள் போராட்டம் – ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு காரணம் என்ன என்பதை கண்டு பிடித்துள்ளார்.

அதுவும் ஒரு காரணம் அல்ல மூன்று காரணங்கள்... அதற்கு முன் அவர் இன்னொரு முக்கிய விடயத்தையும் பகிரங்கப்படுத்தியிருக்கிறார் அதாவது காணாமல் போனோரை கண்டுபிடித்துத் தருமாறு போராட்டம் நடத்துகிற மக்களுக்கு பெருமளவிலானோருக்கு, காணாமல் போன தங்கள் உறவினர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை தெரியுமாம். அவ்வாறு தெரிந்து கொண்டும் அவர்கள் ஏன் இவற்றைச் செய்கிறார்கள் என்பதற்கான காரணங்களைத்தான் அமைச்சர் கண்டுபிடித்து சொல்லியிருக்கிறார்.

அதாவது இழப்பீடு பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டுக்குத் தம்மை தகுதியற்றவர்களாக்கி கொள்வதற்கே அவர்கள் இவ்வாறு செய்கிறார்களாம். இது ஒரு காரணம் – அடுத்தது சர்வதேச ரீதியில் இது தொடர்பாக ஒரு கருத்துருவாக்கத்தை ஏற்படுத்த இவ்வாறு செய்கிறார்கள் என்பதாகும் மூன்றாவதாக புலம் பெயர் மக்களின் தேவைகளைப் பூரத்தி செய்வதற்காக இதனைப் பயன்படுத்துகின்றனராம்... அற்புதமான கண்டுபிடிப்பு! ஆனால் ஐயா சொல்வதை எவராவது நம்புவார்களா என்றால் அதுதான் இல்லை.



இலங்கையில் போர்க்காலத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள், இனப்படுகொலைச் செயற்பாடுகள் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் அனைத்தும் உலகறிந்த உண்மைகளாகி வெகுகாலம் ஆகிவிட்ட நிலையில் தூக்கத்திலிருந்து இப்போதுதான் விழித்தவர் போன்று ஹெகலிய அவர்கள் காரண வியாக்கியானம் கூற முயல்வது உலகின் காதில் பூச்சுற்றும் நடவடிக்கையேயாகும்.

போரின் போது காணாமல் போனோர் கொல்லப்பட்டிருக்கலாம், வெளிநாடு போயிருக்கலாம் என்று ஐயா கதைவிடலாம் அரசிடம் நேரில் சரணடைந்தவர்கள், உறவினரால் கையளிக்கப்பட்டவர்கள் எப்படி காணாமல் போயினர் என்பதற்கு ஐயா என்ன விளக்கம் சொல்லப் போகிறாராம்?

உரிமைகளுக்காகப் போராடிய இனம் சலுகைகள் வேண்டி ஆர்ப்பாட்டமோ போராட்டமோ செய்யாது என்பது அமைச்சர் ஐயாவுக்குத் தெரியாமல் இருக்கலாம். சர்வதேசத்திற்கு இது நன்கு புரியும்...!

ரியர் அட்மிரல் வீரசேகர – அவர்தான் அந்த அதிகம் பேசி அறிக்கை விட்டுக் கொண்டே இருக்கும் இராஜாங்க அமைச்சர் பற்றித்தான் சொல்கிறேன்... அவருக்கும் 13 ஆம் திருத்தச்சட்டம், மாகாணசபை என்ற சொற்கள் என்றாலே "அலர்ஜி" தான். பதவியேற்ற நாளில் இருந்தே 13 ஐ நீக்கவேண்டும், மாகாணசபையை ஒழிக்க வேண்டும் என்று கூறியபடியே இந்தியாவையும் சீண்டிக் கொண்டிருக்கிறார் என்பது தெரியும் தானே!

கடைசியிலை வீரசேகரா குரல் இந்தியாவை எட்டிவிட்டது போலும் ஐயாவுக்கு இந்தியா அவசர அழைப்பு விடுத்திருப்பதாகச் செய்தி அடுத்துவரும் சில தினங்களுள் கொழும்பிலுள்ள இந்தியா தூதரகத்திற்கு மேற்குறித்த இரு விடயங்கள் தொடர்பாகப் பேசுவதற்கு வருமாறு அழைக்கப்பட்டிருக்கிறாராம்! இராஜாங்க அமைச்சர் இராஜதந்திர ரீதியாக அணுக வேண்டிய – அதுவும் இலங்கை இந்தியா என்ற இரு நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்ட உடன்பாடு தொடர்பான பிரச்சினை குறித்து தொடர்ந்து விடுத்துவரும் அறிக்கைகளால் இந்தியா அதிருப்தி அடைந்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக 13ஆவது திருத்தச் சட்டம் ஊரடங்கு சட்டத்தை பிரகடனம் செய்துவிட்டு இலங்கை மீது இந்தியாவினால் திணிக்கப்பட்ட ஒன்று என்றும் இதனை நீக்கும் விடயத்தில் இந்தியாவினால் எதுவும் தலையீடு செய்ய முடியாதெனவும் கடந்த வாரங்களில் அடுத்தடுத்து அறிக்கை விட்டுவருவதை இந்தியா விரும்பவில்லை எனக் கூறப்படுகிறது.

இந்திய அழைப்பு இராஜாங்க அமைச்சர் வீரசேகரவுக்கு அவர் எதிர்பார்த்த ஒன்றாக இருக்காது என்பது மட்டும் உண்மை! இதேவேளை வாசுதேவ நாணயக்கார விடுத்துள்ள அறிக்கையும் இந்தியாவை சீண்டுவதாகவே அமைந் துள்ளது. என நோக்கர்கள் கருதுகிறார்கள். அதாவது இந்தியா மீனவர்களின் மீன்பிடி அத்துமீறல்கள் தொடர்பான பிரச்சினைகதுத் தீர்வு காணுங்கள் என்ற வடபகுதி மீனவர்களின் கோரிக்கைக்கு வாசுதேவர் சொன்ன திமிர்த்தனமான பதில் அவருள்ளிருக்கும் பேரினவாதக் குணாம்சத்தை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.



அதிகாரங்களை, உரிமைகளை இந்தியாவிடம் கேட்டதைப் போன்று மீனவர் பிரச்சினை குறித்தும் இந்தியாவிடமே பேசிக் கொள்ளுங்கள் என அரிய ஆலோசனையை (!?) ஐயா சொல்லியுள்ளார்... இந்தப் பேச்சு அவ்வளவு நல்லதல்ல அமைச்சரே...!

"யாகாவாராயினும் நாகாக்க.." எவரிடமாவது கேட்டு அறிந்து கொள்வது நல்லது. அல்லது "சொல்லிழுக்குப்பட்டு. சோகாப்பஉ..." என்ற விரிகளிலே நீங்களும் இணைய வேண்டிவரும்?

இராஜகோபால் என்னும் இயற்பெயருடைய செம்பியன் செல்வன் யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் சனவரி 1, 1943 இல் பிறந்தவர். இவர் நாவல், சிறுகதை, நாடகம், உருவகம், குறுங்கதை, திரைப்படம், சஞ்சிகை என இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளிலும் தனது ஆளுமையினைப் பதித்தவர். பேராதனைப் பல்கலைக் கழக புவியியல் சிறப்புப்பட்டதாரியான இவர் விவேகி சஞ்சிகையின் இணையாசிரியராக இருந்தவர். தனது தனிப்பட்ட வாழ்வில் இவர் ஆசிரியராக, அதிபராகக் கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். விவேகி, புவியியல், நுண்ணறிவு ஆகிய சஞ்சிகைகளின் இணை ஆசிரியராகவும், அமிர்தகங்கை, கலைஞானம் ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் கடமையாற்றியவர். ஈழத்துப் படைப்பாளிகளைப் பற்றிய "ஈழத்துச் சிறுகதை மணிகள்" என்னும் நூலினை எழுதியுள்ளார். இவரது "சர்ப்பவியூகம்" சிறுகதைத்தொகுதி இலங்கை சாஹித்யவிருது பெற்றது. கலைக்கழகம் நடத்திய நாடகப்போட்டியில் தொடர்ந்து 4 வருடங்கள் முதல் பரிசு பெற்றவர். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகை தனது வெள்ளிவிழா பொருட்டு நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவரது சிறுகதை இரண்டாவது பரிசினைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



# சமத்துவம்

- செம்பியன் செல்வன் -

காலத்தை உடலாக்கி, வரலாற்றை உயிராக்கி வைரம் பாய்ந்து. அடர்ந்து செழித்து கிளை விரித்து சுற்றம் பரப்பி நின்ற அது ஒரு கால விருட்சம்! அதனை அண்டி அழகான நீராழி! பசுமை கொழிக்கும் வயற்பரப்பு! எல்லாவற்றிற்கும் ஆணி வேர் - அந்த மரம்! கிளைகள் ஒவ்வொன்றும் தொங்கு தோட்டங்களா...?


பச்சைப் புடவையின் ரத்தத் துளிகளாக சின்ன இதம் விரித்து போதுவிழ... புள்ளினம் பூரித்து மகிழ... தென்றல் கொஞ்சும் மொழியில் இன்ப ரகசியம் பேச... எங்கும் மகிழ்ச்சிப் பிரவாகம்...! அப்போது - எங்கிருந்தோ அந்தப் பறவை பறந்து வந்தது. அதன் வாயிற் மணிமணியான பழக்கொத்து... மரக்கிளையிலமர்ந்தது. அலகுகள் கனிகளை "ருசி" பார்க்கத் தொடங்கின! பழங்கள் ஒவ்வொன்றாக அதன் மென் வயிற்றில் இறங்கலாயின... உண்ட களைப்புக்கு கிளை "பாய்" விரித்தது. கண்மூடிய ஞானி நிலையில், உண்ட வீட்டுக்கும் இரண்டகம் செய்கிறோமென்ற பிரக்ஞையின்றி கிளையிலேயே எச்சமிட்டது. சிறிது நேரத்தில் அது- பறந்தே போய்விட்டது.
அதற்குத் தெரியுமா தான் எவ்வளவு பாதகத்தை - விபரீதத்தை - அம்மரத் திற்கு ஏற்படுத்திச் செல்கிறோமென்று...?
பருவம் மாறத் தொடங்கியது...
காலாஸ்திரம் பாய்ந்த அதிர்ச்சியால் இலைகள் உதிரத் தொடங்கின...

மாரி வந்தது! இலைகள் துளிர்த்தன...! பசுமைக் கோலம், அழகு சமைத்தது... பச்சைச் சுடர்களாக துளிர்கள் தகதகத்தன! காலவிருட்சத் துக்கு குமரிப் பெண்ணின் லாவண்யம்..
காலவிருட்சம் தன்னை ஒருமுறை பார்த்துக் கொண்டது...!

"ஆ...! யாரிந்தப் புதிய விருந்தினன்...! எப்போது இவன் இங்கே வந்தான்... எப்படி இங்கு குடியேறி னான்..." - என்ற வியப்போடு தனது பார்வையைச் செலுத்தியது. அங்கே மரத்தின் கிளையொன்றில், பழத்தினின்றும் தலை நீட்டும் "வெண்புழு" வென மென் பசுமை கோலமிட, இளந்தளிர்க் கொடியொன்று காற்றிலே அசைந்தாடிக்கொண்டிருந்தது. "யாரிந்தக் குழந்தை யார்... தவறவிட்டார்கள்...!" என்ற பரபரப்பில் கண்களை நாலா பக்கமும் ஓடவிட்டது. சூன்யம்.

பதினாறும் பெற்ற, தாய்மையே உணர்வாகக் கொண்ட மரத்தின் தாய்மைக் குமிழிகள் உடையலாயின! "பாவம் ! பச்சிளங் குழந்தை!" பச்சைக் பசுங் கொழுந்தை அன்புடன் அணைத்து, தடவிக் கொடுத்தது. தன் இரத்தத்தில் ஒரு பகுதியை தியாகம் செய்ய... பசுங்கொடியும் நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக செழித்து வளரலாயிற்று...

உலகின் பல பாகங்களிலிருந் தும் பறவையினங்கள் கூட்டம் கூட்டமாக வரத்தொடங்கின...! தன் வளர்ச்சிக்கேற்ப எண்ணங்களையும், கோட்பாடுகளையும் லட்சியங்களையும் மனிதன் மாற்றிக் கொள்வதைப் போல, அந்தப் பறவையினங்களும், பருவ மாறுதலுக்கேற்ப "சுகஜீவனம்" விரும்பி தமது நாட்டை விட்டு வரத் தொடங்கின...! கலகலப்பு தோன்றிவிட்டது. அப்படித் தான் அந்தப் பறவையும் எங்கிருந்தோ வந்து சேர்ந்தது. ஏனைய பறவைகள் ஆச்சரியத்துடன் அதனைப் பார்க்கத் தொடங்கின...! அதன் சிவந்த மேனியில்



பொட்டுப் பொட்டாகக் கரும்புள்ளியிட்ட விசித்திர கோலமும்... வக்கிர குணமும்... அவைகளை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டன!

எங்கோ பரந்த கிழக்கு நாடொன்றிலிருந்து வந்ததாகக் கூறிப் பெருமையடித்துக் கொண்டது. தனது நாட்டைப் பற்றிக் கதைகதையாக எவ்வளவோ கூறியது. அது கூறியதன் பெரும் பகுதி ஏனைய பறவைகளுக்கு புரியவில்லை... அந்த நாட்டின் பெயர் கூட பறவைகள் வாயில் நுழையவில்லை. எல்லாப் பறவையின மும் ஒன்று கூடிச் சந்தோசமாக ஜீவிக்கலாயின...
அன்று!

அந்த விசித்திரப் பறவை மரக்கிளைகளில் தத்தித் தத்தி நடந்து சென்றது... கிளையில் படர்ந்திருந்த புதிய படர் கொடியைக் கண்டது.
-வியப்பு !
- சிந்தனை!
- ரௌத்திரம் !

"இதென்ன வேற்றுமை... ஜனத்தில் இப்படி ஒரு வேற்றுமையா...?" "பார்!... இந்தக் கொடிய விருட்சத்தை.. எவ்வளவு பலசாலியாக உண்டு கொழுத்துப் போயிருக்கிறான்... ஆனால் இக் கொடியோ... இந்த மரத்தின் ஒரு பாகமே... எவ்வளவு பலவீனனாக... தென்றலுக்குக் கூட தாக்குக் கொடுக்க இயலாத "சோனி" யாக... சீ!... இதென்ன கொடுமை! .. அக்கிரமம்!... "

கொடியை பரிதாபமாக நோக்கி இரங்கியது. "ஏன் அப்படிப் பார்க்கிறாய்?..." என்றது படர் கொடி. "உன் நிலையைக் கண்ணுற்றால் கல்நெஞ்சக்காரனும் கலங்குவானே!" - என்றது பறவை. "ஏன்?... என் நிலைக்கென்ன?..." என்று பரபரப்புடன் கேட்டது படர்கொடி. "உனக்கு உன் உடலால் சுயமாக நிற்கத் திராணியில்லை... பிடித்தால் ஒழிந்துவிடும் நிலையாயிருக்கிறாய்... ஆனால் இந்த விருட்சத்தைப்பார்... எவ்வளவு பலசாலியாக இருக்கிறான்..." "என்ன செய்வது?... அதன் உடல்வாகு அப்படி!... அது இயற்கையின் நியதி!..."

"எது இயற்கையின் நியதி!... ஒருவன் சொத்தை... ஒருவனுக்கு சேரவேண்டிய உணவை... தனது தேவைக்கு மேல் உண்டு கொழுப்பதா உலக நியதி...? மற்றவனின் வயிற்றில் மண்ணடிப்பதா இயற்கை நியதி!... ஆமாம் நியென்ன செய்வாய்!... நீ வாழும் உலகம் அப்படிப்பட்டது...! அதனால் கூறுகிறாய் அப்படி... ஆனால் நீ கிழக்கு நாடுகளுக்கு வந்திருக்க வேண்டும்... ஏன் எங்கட நாட்டை எடுத்துக் கொள்ளேன்!..." - என்று தனது நாட்டின், பிரயாண அனுபவங்களை அழகாக, கவர்ச்சியாக எடுத்துக் கூறத் தொடங்கியது...!

"எங்கள் நாடுகளிலெல் லாம் ஆரம்பத்தில் இப்படித்தானிருந் தன...! ஆனால் உன்னைப் போல் அடக்கப்பட்டு வலியிழந்திருந்த மக்கள் கூட்டம் திரெண்டெழுந்த போது, சர்வாதிகார ஆதிக்கம் பிடித்த இந்த விருட்சத்தைப் போன்ற ஆட்சியே அழிந்தொழிந்தது...! இதற்குத்தான் உலக வரலாறு நன்கு தெரிந்திருக்க வேண்டுமென்பது... !" பறவை ஏதேதோ பேசிப் படர் கொடியை மயக்கியது.

"அதுசரி!.... ஆனால் எனக்கு அப்படி எந்தவித வஞ்சகமோ... அடக்கு முறையோ இந்த மரம் நடத்தவில்லையே" என்றது. "அப்படித்தான் நீ உன் அறியாமை யினால் கூறுவாய் என எனக்குத் தெரியும்... உன் அறியாமை அகலுமட்டும்... நீ அடக்கபட்டே இருப்பாய்... இதோபார் நீ இப்படி வலிகுன்றியிருக்க... விருக்ஷம் பலசாலியாக இருக்கக் காரணம் என்ன தெரியுமா? உனக்குச் சொந்தமான ஜீவரசத்தை கூட உனக்கு தராமல்தானே உறுஞ்சுகிறது.. உன்மீது விழவேண்டிய அமுதக்கதிர்களையும் தானே தாங்கிக்கொள்கிறது... இதனால் தான் உனக்கு இந்தநிலை..."

"அப்படியானால் நான் என்ன செய்ய வேண்டும்...!" எனக் கேட்டது படர்கொடி. "நீ உனது உரிமைக்காக... சமத்துவம் பெறுவதற்காக.. சுதந்திர வளர்ச்சிக்காக போராட வேண்டும்...!" என்றது பறவை. படர்கொடி சிந்தனையிலாழ்ந்தது.
பறவை வசந்தகாலம் முடிந்ததும் தனது தாய் நாட்டிற்குப் பறந்து போய்விட்டது!

படர் கொடிக்கும் விருட்சத்துக்கு மிடையே இப்போது பெரும்பகை ஏற்பட்டு வந்தது! "சண்டாளன்!... என் பலத்தை எல்லாம் திருடும் நாசகாரன்!... சமுதாய விரோதி!... என்றெல்லாம் ஓயாமல் திட்டிக் கொண்டு வந்தது படர்கொடி. கால விருட்சத்துக்கு மனத்தாங்கல்!

"நான் என்ன தவறு செய்தேன்!... இருக்க இடம் கொடுத்தேன்!... என்னுயிரில் பங்குகொடுத்து நீயும் வாழ என்று அரவணைத்தேன்!... அதற்குப் பிரதியுபகாரமா?... என்ன இருந்தாலும் இன்னொருவன் பிள்ளைதானே!..." -படர் கொடியின் சீற்றத்துக்கு அது காரணம் அறியவில்லை. படர்கொடியின் உள்ளத்தில் நச்சுவிதை விழுந்து விட்டது. அந்த நச்சு எண்ணமே அதன் வளர்ச்சியை உருக்குலைத்துவர, அது "நராங்க"த் தொடங்கியது.

ஒரு நாள் படர்கொடிக்கு வித்திட்ட பறவை வந்தது. படர்கொடி யைக் கண்டது. "ஓ!... நீயா?... சுகமாக இருக்கிறாயா?... உன்னை உன் வளர்ப்புத் தாய் நன்றாய்க் கவனிக்கிறாளா?..." எனக் கேட்டது. "வளர்ப்புத் தாயா?... யாரவள்" -படர் கொடி வியந்தது. "யாரா?... யாருன்னை வளர்கிறார்களோ? அவர்கள்... "யாரென்னை வளர்க்கிறார்கள்...?" -கலகலவெனப் பறவை சிரித்தது. "வேறு யார்?... இந்த மரமே உனது வளர்ப்புத்தாய்!"

"இதுவா, வளர்ப்புத்தாய்!... என் ரத்தத்தையெல்லாம் உறிஞ்சி எடுக்கும் நாசகாரியல்லவா?...! "வாழு! வாழ விடு!..." என்ற தத்துவமே இதற்குத் தெரியாதே!... இதுவா என்னை வளர்க்கப்போகிறது?" என்று ஏளனமாகக் கேட்டது. "அடப்பாவமே!... உனக்கேன் இந்தக் குணம்... இந்த எண்ணத்தால்தானே நீ இதன் மேல் கோபம் கொண்டிக்கிறாயா?... உனக்கு யார் துர்ப்போதனை செய்தார்கள்... அது உன்னிடமிருந்து ஜீவரசத்தைப் பெறுவதாக எப்படிக் கூறுகிறாய்?... ஏன், நீயே அதனிடமிருந்து பெறுவதாக ஏன் கூறக்கூடாது...?

.... உன் சமதர்மத்தை நிலைநாட்டுவதில் கவனமாக இருக்கிறாயே... சமதர்மம் என்றால் என்ன என்று உனக்குத் தெரியுமா?... எது சமதர்மம்... விருக்ஷம் பெறும் ஜீவரசத்தில் சமபங்கை பாதியை- உன்னிடம் தந்தால் அது எப்படி சமதர்மம் ஆகும்?... ஏனெனில் அதன் வளர்ச்சிக்கு.. அதன் விருத்திக்குத் தேவையான ஜீவரசம் உனக்குச் சம பங்கு தந்தால் குறைந்துவிடும்... அப்போது உன் தேவைக்கு மீறிய ஜீவரசத்தைப் பெற்று முதலாளித்துவம் பெற்றுவிடுவாய்!.... அப்போது நீயே சர்வாதிகாரியாக மாறிவிடுவாய்... ஆகவே தேவைக்கேற்ப பங்கு பெறுவதுதான் சமதர்மமே ஒழிய பொருட்களைப் பிரிப்பது சமதர்மல்ல...!


... நீயோ நன்றிகெட்ட தனமாக... யாரோ சொன்ன பேச்சைக்கேட்டு, பெற்ற அன்னைபோல் வளர்த்த இவ்விருக்ஷத்தைத் துன்புறுத்திவிட்டாயே!... அதனிடம் மன்னிப்புக் கோர்...!" படர் கொடி ஞானஒளி பெற்ற தபஸ்வியாகியது.

இப்போது - காலவிருட்ஷத்தை அன்புடன் இறுகத் தழுவியவாறு, படர்ந்து ஜீவித்து வருகின்றது.

புரட்டாதி ஐப்பசி 1963

# யுக சிந்தனை

- செம்பியன் செல்வன் -



கற்கடகத்தின் வாஞ்சையற்ற முற்றுகை. வாழ்வளித்த வயலெல்லாம் வரட்சி, பாளம் பாளமாக நிலமாதாவின் மேனியெங்கும் பொருக்கு வெடித்த அலங்கோலம். பயிர்கள் வாடிய சருகு கூடத் தூசாகிப் பறந்துவிட்ட துயர் நிலை. பச்சை பகல் கனவாகிய ஏக்கம்.
பட்சிகள் பறந்தன. கால்நடைகள் கதறின. ஊர்வன அழிந்தன. மனிதன்-?
நம்பிக்கை ஒன்றின் அத்திவாரத்தில், வானத்தை அண்ணாந்து பார்த்துக்கிடந்தான்.
பட்சிகள் ஒன்று உயரப் பறந்தது. அதன் பூஞ்சிறகுகள் கதிரவனின் வெப்பத்தில் கரிந்து பொசுங்கும் வேதனை. கும்பி கதறியது.
"பசி!... பசி!.. ஏதாவது புசி!... புசி!... வயிறு காளவாயாகி அனலை எறிந்தது. உள்ளேயும் தீ! பெருந்தீ!
உயிராசை சோர்வை விரட்டியது. பட்சி தனது பயணத்தைத் தொடர்ந்தது. கழனிப் பகுதி. பச்சைக் கிராமம். வயலிலே அறுவடை, களத்து மேட்டினிலே நெற்குவியல், தோப்புகளிலே கனி தரு மரங்கள், பழுத்துக் குலுங்கின. கனிச் சோலை-உயிர்ச்சோலை.
பட்சியின் உள்ளம் உற்சாகமாகக் கூவியது. ஒரு பழமரத்தின் கிளையிலே "விர்" என்று பறந்து சென்று அமர்ந்தது, அதன் அலகுகள் வேட்கையுடன் கனியின் கதுப்பு மேட்டினிலே அழுந்தலாயின.
அலகெல்லாம் வழிந்தது பழரசம். அதன் வயிற்றுப் பெருந்தீயும் மெல்ல மெல்ல அணைந்தது.
வயிறு குளிர்மையில் நிறைந்தது. எஞ்சிய பழம், காம்பிலே ஊசலாட, பட்சி நகர்ந்து அமர்ந்தது.
மரக் காம்பிலே எறும்பு ஒன்று பட்சியின் செயல்கண்டு வியந்து நின்றது.
"நீயார்?" எங்கிருந்து வருகின்றாய்?...."
பட்சி தானிருந்துவந்த இடத்தை கூறியதும். "ஆ!... என்ன.... அவ்வளவு தூரத்திலிருந்தா வருகின்றாய்?..." என வியந்தது.
"அதுசரி! இவ்வளவு தூரத்திலிருந்து கஷ்டப்பட்டு வந்து, நாளைக்கு என்பதனைப் பற்றிக் கவலைப்படாமல் போகிறாயே?... சேமிக்க வேண்டாமா?"
"சேமிப்பா?... அது ஒரு கொள்ளை அடிப்பல்லவா?..."
"கொள்ளையா?"
"வேறென்ன? தன் தேவைக்கு மேல், ஒரு பொருளை வைத்திருப்பது கொள்ளையடித்தலுக்கு நிகர் தானே?..."

"அது சரி!... நீ நல்லாக இருந்த காலத்தில், உன் பிற்கால வாழ்விற்கு என்று ஏதாவது மீத்து வைத்திருந்தால், இன்று நீ உன் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய கதி ஏற்பட்டிருக்காதே?... இதோ எங்களைப் பார்...! வெயிற் காலங்களில் நாங்கள் கஷ்டப்பட்டு சேமிப்பது மழைக்காலத்தில் சுகமாக வாழவே தவிர மற்றவர்களைக் கொள்ளையடிக்க வேண்டும் என்பதற்காக அல்ல.... மனிதனைப் பார்! அவனும் அப்படித்தானே வாழ்கிறான்..." - எறும்பு வினாவியது.
பட்சி "கடகட" வென நகைத்தது.
"நல்ல கேள்வி... புத்திசாலித்தனமான கேள்வி!... விடைகாண வேண்டிய கேள்வி" என்று எறும்பைப் பாராட்டிக் கொண்ட பட்சி மேலும் சொல்லலுற்றது.
"உங்கள் சேமிப்பு என்பது உங்கள் நாளாந்த வாழ்க்கையின் இரட்டிப்பு, உழைப்பு என்பதுதான், மழைக்காலத்தில் உங்கள் உழைப்பிலிருந்து உங்களைப் பாதுகாக்கின்றது. ஆகவே உங்கள் உழைப்பு கொள்ளைக்கு நிகரல்ல. அது சத்திய உழைப்பின் பலன். ஆனால் மனிதன் சேமிப்போ, இன்னொருவன் வயிறு பட்டினியால் கிடப்பதால் ஏற்படுவது. அவன் பகுத்தறிவுவாதி. அந்தப் பகுத்தறிவுவாதத்தால் தன் கொடுஞ் செயலை மறைத்துவிடுகின்றான். ஆனால் நாங்களோ எங்கள் தேவைக்கு மேல் எப்போதுமே பெறமுயல்வதில்லை. நாளை என்பது தனி ஒரு உயிருக்கு மட்டும் இருப்பதில்லை. உலகின் எல்லா உயிருக்குமே பொதுவாக இருக்கும் போது, தனி ஒருவனின் " நாளைக்கு" எம் குலம் முக்கியத்துவமளிப்பது ஒரு போதும் கிடையாது..."
அப்போது...
பட்சி உண்ட கனியினை, இன்னோர் பறவை வந்து, அதிக மகிழ்வுடன் கொத்தி உண்கிறது.

கீழே களத்து மேட்டுத் தானியங்கள், களஞ்சியத்தை அடைந்துவிட்டதால் வெறுமையாகிக் கிடக்கின்றது.

கையேந்தும் கும்பல் ஒன்றை மனிதன் ஒருவர் விரட்டிக் கொண்டிருக்கிறான்.
இதனை நோக்கிய எறும்பு, நிதனையில் ஆழ்ந்தது.

SIVARAJ

## ரூபி பள்ளி சென்ற கதை!

அமெரிக்கர்களின் இனவெறிப் பக்கம். “அச்சிறுமி கருப்பினத்தை சேர்ந்தவள் என்பதால் அமெரிக்க பள்ளியில் அனுமதிக்கப்படவில்லை. அமெரிக்காவின் வெள்ளை இன குழந்தைகள் படிக்கும் பள்ளிகளில் கருப்பின மாணவர்கள் யாரும் அனுமதிக்கப்படாத காலம் அது. அந்நாட்டின் உச்சநீதி மன்றம் வெள்ளையர் பயிலும் பள்ளிகளில் கருப்பின குழந்தைகளும் சேர்க்கபட வேண்டும் என உத்தரவிட்டது.

எல்லோருக்கும் எளிதாகக் கிடைப்பவை கூடச் சிலருக்குப் போராடினால்தான் கிடைக்கின்றன. அப்படிப் போராடியவர்களில் ஒருவரான ரூபி பிரிட்ஜஸ், வரலாற்றில் அழுத்தமாகத் தன் முத்திரையைப் பதித்திருக்கிறார். அமெரிக்காவில் இனவெறி தலைதூக்கியிருந்த காலகட்டம் அது. அமெரிக்கர்களுக்கும் ஆபிரிக்க - அமெரிக்கர்களுக்கும் இடையே கல்வி, வேலை, போக்குவரத்து என்று அனைத்திலும் பாகுபாடுகள் நிலவியதை எதிர்த்து நீண்ட காலம் குடிமையுரிமைப் போராட்டங்கள் நடைபெற்று வந்தன. அதன் விளைவாக 1954ஆம் ஆண்டு அமெரிக்கர்கள் மட்டும் படித்துவந்த பள்ளிகளில் இனி ஆப்பிரிக்க அமெரிக்கர்களும் படிக்கலாம் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. தீர்ப்பு வந்த அதே ஆண்டில் செப்டம்பர் 8ஆம் தேதி மிசிசிபியில் குத்தகை விவசாயம் செய்துகொண்டிருந்த பெற்றோருக்குப் பிறந்தார் ரூபி பிரிட்ஜஸ்.

அவரது குடும்பம் நியூ ஆர்லியன்ஸ்க்கு இடம்பெயர்ந்தது. தொலைவில் இருந்த ஆப்பிரிக்க அமெரிக்கர்களுக்கான மழலையர் பள்ளியில் நான்கு வயது ரூபி படித்துவந்தார். வீட்டுக்கு வெகு அருகிலேயே இருந்த அமெரிக்க வெள்ளை இனத்தவர்கள் மட்டும் படித்துவந்த வில்லியம் ஃபிரான்ட்ஸ் பள்ளியில் தன் மகளைச் சேர்க்க விரும்பினார் ரூபியின் அம்மா.

தீர்ப்பு வந்தாலும் பள்ளியில் ஆப்பிரிக்க அமெரிக்கர்களை அனுமதித்துவிடக் கூடாது என்பதில் பல்வேறு தரப்பினரும் உறுதியாக இருந்தனர். அதனால் கடினமான நுழைவுத் தேர்வை வைத்திருந்தனர். நுழைவுத் தேர்வு எழுதவரும் குழந்தைகள், தோல்வியடைந்து மீண்டும் பழைய பள்ளிக்கே சென்றுகொண்டிருந்தனர். ரூபியை நுழைவுத் தேர்வுக்கு அனுப்பினார் அவருடைய அம்மா. தேர்ச்சி பெற்ற ஆறு குழந்தைகளில் ரூபி மட்டுமே அந்தப் பள்ளியில் சேர விரும்பினார். இனவெறியின் வெளிப்பாடு விஷயம் வெளியில் தெரிந்ததும் அமெரிக்கர்கள் கொதித்துப் போனார்கள். தங்கள் குழந்தைகள் படிக்கும் பள்ளியில் எந்தக் காரணம் கொண்டும் ஓர் ஆப்பிரிக்க அமெரிக்கக் குழந்தை படிப்பதை அனுமதிக்க முடியாது என்றார்கள். சட்டம் ரூபிக்கு ஆதரவாக இருந்ததால் அந்தப் பகுதியில் அமெரிக்கர்கள் படிக்கும் பள்ளிகளில் முதன்முறையாக, ஓர் ஆப்பிரிக்க அமெரிக்கக் குழந்தை சேர்க்கப்பட்டாள். ஆனாலும், தீர்ப்புக்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கான வழிகளும் தந்திரங்களும் மேற்கொள்ளப்பட்டன. அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன. குழந்தைக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

செப்டம்பர் மாதம் பள்ளி செல்ல வேண்டிய ரூபி, நவம்பர் 14 அன்று முதல் முறையாகத் தன் அம்மாவுடன் பள்ளிக்குச் சென்றுசேர்ந்தாள். இவருக்கு முன்னால் இரண்டு மார்ஷல்களும் பின்னால் இரண்டு மார்ஷல்களும் காவலுக்கு வந்தனர். நடுவில் எந்தவிதப் பயமும் இன்றி கம்பீரமாகத் தன் பையைப் பிடித்தபடி நடந்து சென்றாள் ரூபி.

ஆக்ரோஷத்துடன் திரண்டு நின்ற மக்கள், கையில் கிடைத்த பொருட்களை எல்லாம் தூக்கி எறிந்தனர் கூச்சலிட்டனர். இனவெறி குறித்தெல்லாம் அறியாத ரூபி, அது ஒரு பண்டிகை என்று நினைத்தாள். நிலைமை மோசமானதால் உடனடியாக முதல்வர் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள்.

அமெரிக்கப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வேறு பள்ளிகளில் சேர்க்கப் போவதாக மிரட்டினார்கள். சிலர் பள்ளியைத் துறந்து வெளியேறினார்கள். ரூபியின் அப்பாவுக்குக் கவலை அதிகரித்தது. மீண்டும் பழைய பள்ளிக்கே போய்விடலாம் என்றார். ஆனால், ரூபியின் அம்மா அதை மறுத்தார். எத்தனையோ ஆண்டுகள் போராடிப் பெற்ற இந்த உரிமையை விட்டுக்கொடுக்கக் கூடாது. இன்று நாமும் நம் குழந்தைகளும் படக்கூடிய கஷ்டங்கள், எதிர்காலத்தில் ஏராளமான குழந்தைகளின் வளமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும்” என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

### ஒதுக்கப்பட்ட ரூபி

இரண்டாவது நாளும் ஏராளமான எதிர்ப்புகளுக்கு இடையே பள்ளியில் நுழைந்தாள் ரூபி. ஓர் ஆப்பிரிக்க அமெரிக்கக் குழந்தைக்கு எங்களால் பாடம் எடுக்க முடியாது என்று ஆசிரியர்கள் சொன்னார்கள். பள்ளி நிர்வாகம் செய்வதறியாது



திகைத்தது. பாஸ்டனிலிருந்து புதிதாக வந்திருந்த பார்பரா ஹென்றி மட்டும், பாடம் எடுப்பதற்கு முன்வந்தார். அதனால் ஹென்றி எடுக்கும் வகுப்புகளுக்குத் தங்கள் குழந்தைகளை அனுப்ப விரும்பாத பெற்றோர், வேறு பள்ளிகளுக்குக் குழந்தைகளை அழைத்துச் சென்றனர்.

ஒரே ஒரு குழந்தைக்காக பார்பரா பாடம் எடுத்தார். ரூபியும் மகிழ்ச்சியாகப் படிக்க ஆரம்பித்தாள். ஆனாலும், ரூபிக்கு எதிரான நடவடிக்கைகள் குறையவில்லை. பள்ளி உணவுக்கூடத்தில் சாப்பிடக்கூடாது, கழிப்பறைகளைப் பயன்படுத்தக்கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடுகள் வந்தன. ஓர் அமெரிக்க மாணவனின் தாய், உணவில் விஷம் வைத்து ரூபிக்குக் கொடுக்கப் போவதாகச் சொன்னார். அதனால் பாதுகாப்பு வீரர்கள் வீட்டு உணவை மட்டுமே சாப்பிட அனுமதித்தனர். சக மாணவர்களிடம் பேசுவதற்கு எவ்வளவோ முயன்றாள் ரூபி. ஆனால், ஒருவரும் அவரிடம் பேசவில்லை. சில வாரங்களுக்குப் பிறகே தான் ஒதுக்கப்பட்டிருக்கிறோம் என்ற விஷயம் அவளுக்குப் புரிய ஆரம்பித்தது.

கொஞ்சம் கொஞ்சமாக மன அழுத்தத்துக்கு உள்ளானாள். மதிய உணவைப் புறக்கணித்தாள். ஒவ்வொரு நாளும் ரூபிக்குத் தைரியம் சொல்லி அனுப்பிவைப்பார் அவளுடைய அம்மா. பள்ளியில் ஆசிரியர் பார்பரா தைரியம் அளிப்பார். அவளுடன் சேர்ந்து சாப்பிடுவார். மருத்துவர் ராபர்ட் கோல்ஸ் அடிக்கடி ரூபியைச் சந்தித்து, மன நல ஆலோசனை அளிப்பார். வீட்டிலும் பிரச்சினைகள் அதிகரித்தன. மகளைப் பள்ளியில் சேர்த்த குற்றத்துக்காக ரூபியின் அப்பா வேலை இழந்தார். தாத்தா, பாட்டி குத்தகைக்கு எடுத்த நிலம் பறிக்கப்பட்டது. மளிகைக் கடைகளில் பொருட்கள் மறுக்கப்பட்டன. குடும்பமே ஒதுக்கிவைக்கப்பட்டது.

### புதிய விடியல்

மாதங்கள் சென்றன. சில அமெரிக்கர்களும் ஆப்பிரிக்க அமெரிக்கர்களும் ரூபியின் குடும்பத்துக்கு உதவ ஆரம்பித்தனர். அப்பாவுக்கு வேறு வேலை கிடைத்தது. சிலர் உணவு, உடை, புத்தகங்கள் போன்றவற்றை வாங்கிக் கொடுத்தனர். பள்ளியில் ஓராண்டை நிறைவு செய்தாள் ரூபி. இரண்டாவது ஆண்டில் சூழல் மாறியது. பள்ளியை விட்டுச் சென்ற குழந்தைகள், மீண்டும் பள்ளிக்குத் திரும்பினர். மார்ஷல்களின் பாதுகாப்புத் தேவையில்லை என்ற நிலை வந்தது. குழந்தைகள் ரூபியுடன் படிக்க ஆரம்பித்தனர். ஆசிரியர்களும் இன வெறுப்பைக் கைவிட்டு, பாடம் எடுத்தனர்.

நல்ல மனம் கொண்ட ஒரு புத்திசாலிக் குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுத்ததைப் பெருமையாகக் கருதுவதாகச் சொன்னார் பார்பரா ஹென்றி. ரூபிக்கு மருத்துவம் அளித்த ராபர்ட் கோல்ஸ், 1995 - ம் ஆண்டு ‘தி ஸ்டோரி ஆஃப் ரூபி பிரிட்ஜஸ்’ என்ற குழந்தைகளுக்கான புத்தகத்தை எழுதி வெளியிட்டார். “எவ்வளவு மோசமான சூழலிலும் ரூபி அழுது நாங்கள் பார்த்ததில்லை. எங்களுக்கு நடுவே, சிறிய ராணுவ வீராங்கனையைபோல் அழகாக அவள் நடந்துவருவாள்” என்றார் மார்ஷல் சார்லஸ் பர்க்ஸ்.

1999-ம் ஆண்டு ரூபி பிரிட்ஜஸ் ஃபவுண்டேஷன் என்கிற அமைப்பை ஆரம்பித்தார் ரூபி. இந்த அமைப்பு குழந்தைகளின் கல்விக்காக உதவுவதுடன், சகிப்புத்தன்மை, மரியாதை, மனித மாண்புகள் போன்றவற்றைக் கற்றுக்கொடுக்கிறது. ‘இனவெறி என்பது வேகமாகப் பரவும் ஒரு தொற்றுநோய். அதை நம் குழந்தைகளுக்குப் பரவாமல் தடுப்பதே இந்த அமைப்பின் நோக்கம்’ என்ற லட்சியத்தோடு செயல்பட்டு வருகிறது. 2001-ம் ஆண்டு ‘பிரசிடென்ஷியல் சிட்டிசன்ஸ் மெடல்’ என்ற உயரிய விருதை அப்போதைய அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் ரூபிக்கு வழங்கினார். இண்டியானாபொலிஸில் உள்ள குழந்தைகள் அருங்காட்சியகத்தில் ரூபியின் வாழ்க்கை காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. உலக எழுத்தறிவு நாளும் ரூபியின் பிறந்தநாளும் செப்டம்பர் 8 என்பது தற்செயல் என்றாலும் பொருத்தமானது!

தீபம்




கொஞ்ச நாளைக்கு முன்னம், நடந்த கதை . அதைப் பாத்துக் கொண்டிருந்தவை தான் சொல்லுச்சினம். ஐயா, கட்சிக்காரரோடை கதைச்சுக் கொண்டிருந்தாப் போலை கட்சிக்காரார் ஏதோ இடக்கு முடக்காச் சொல்லிப் போட்டினம் எண்டு அவர் குழம்பீட்டாராம்.

குழம்பினதுமட்டுமில்லை “உப்பிடிக் கட்சீக்கை குழப்படி விட்டால், நான் எல்லாத்தையும் விட்டிட்டுப் போயிடுவன்,” எண்டு கத்தத் துவங்கிவிட்டாராம்.

கட்சிக்காரர் பயந்திட்டினமாம். “விட்டிட்டுப் போயிடுவன்” எண்டதை அவை உண்மை எண்டு நம்பீட்டினம். அவை இவ்வளவு நாளும் ஐயாவோடை இருந்தும் அவற்றை குணம் அவைக்குத் தெரியேல்லை. வயசு வட்டுக்கைபோனாலும், அவர் ஒரு விடாக் கண்டன் எண்டது அவைக்குத் தெரியாது போலை.

இப்ப கட்சிக்காரர் கேள்வி கேக்கத் துவங்கிவிட்டினம்.

இனிச் சனமும் கேள்வி கேக்கத் துவங்கிவிடும்.தெரியுந்தானே சனத்தின்ரை கேள்வி எப்பிடி இருக்குமெண்டு..? நாய் சத்தி எடுத்த மாதிரிக் கேள்வியள்வரும். சிலதுக்கு மறுமொழி சொல்லுறது கஷ்டம். அப்பிடித் தட்டித் தவறிச் சொன்னாலும், அதுக்கும் மறு கேள்வி கேப்பங்கள். அதுக்கு மறுமொழி சொன்னா என்ன , சொல்லாட்டில் என்ன அடுத்த கணம் முகநூலிலை “ஐயா அப்பிடிச் சொன்னார். ஐயா .இப்பிடிச் சொன்னார் “ எண்டு போட்டிடுவங்கள். பிறகு உலகெங்கும் அது நாறாமல் நாறும்.

அப்ப இதெல்லாம் தேவையோ?

அதைவிட்டிட்டு இதுக்கை கிடந்து கயங்காமல் வெளியாலை போறதுதான் புத்தி எண்டு கதைச்சவர் எண்டும் கேள்வி. இப்ப பாக்கப்போனால், இத்தினை வருசமாச் சொன்னது எல்லாம் பொய். செய்ததெல்லாம் தில்லுமுல்லு எண்டமாதிரி எல்லே கிடக்கு.அனுபவிக்கிற ஆசை ஆரைத்தான் விட்டு வைச்சிருக்கு? வீடும் வேணும். காரும் வேணும். நல்ல காலம் மற்றதொண்டை அவர் கேக்கோமல் விட்டிட்டார்.

நினைக்க நினைக்க எவ்வளவு ஆத்திரம் வரும்? எத்தினை வருசமா எங்களை ஏமாத்திப் போட்டார்.இந்தா வருகிது. அந்தா வருகிது, பஸ்ஸிலை வருகிது. வானிலை வருகிது. பெட்டியிலை வருகிது. சூட்கேசுக்கை வைச்சுத்தாறான், எண்டு என்னென்ன “றீல்” எல்லாத்தையும் மனுசன் விட்டார்? மாவை பாவம். கிளிப்பிள்ளை சொல்லுறமாதிரி அவர் சொல்லிக் குடுக்கிறதை அப்பிடியே சொல்லுவர். அது சரியோ அல்லது பிழையோ எண்டு சுயமாச் சிந்திக்கிறது கிடையாது. சுயமாச் சிந்திச்சிருந்தால் நாங்களும் எங்கையோ போயிருப்பம். அவரும் எங்கையோ போயிருப்பர்.

அதிருக்கட்டும், பிடிச்சுக் கொண்டுபோன சிவாஜிலிங்கத்தை விட்டாச்சாம். அந்தாளைப் பிடிச்சுக் கொண்டு போகேக்கையே விடுவங்கள் எண்டு எல்லாருக்கும் தெரியும். சட்டத்தரணி சிறிகாந்தா சும்மா விடுவரே? வாங்கு வாங்கெண்டு வாங்கிப் போடுவர். ஆனால் ஒரு முசுப்பாத்தி பொலிஸ்காரற்றை சேட்டை. “ஈழம்” எண்டு பாவிக்கப்படாதாம். பாவிக்கிறது குற்றம் எண்டு எனக்கு நேற்றுத்தான் தெரியும்.

தீபனுக்கு விளக்கு வைக்கிற இடத்திலை ,ஈழம் எண்டு பாவிச்சால்தான் குற்றமாம். ஆனால் கட்சியளைப் பதியேக்கை தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி, தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் எண்டெல்லாம் பதிஞ்சவை. அப்பிடி ஒண்டு இருக்கிது எண்டு பொலிஸ்க்குத் தெரியாதோ? அங்கை வெடுக்குநாறி மலையிலையும் உவையின்ரை பயறு அவியேல்லைப்போலை. அங்கையும் நல்லா நாறிப்போச்சினம் எண்டு கேள்வி. இருந்து பாருங்கோ. இன்னும் நாறுவினம்.



# யானைகளின் கதை

**ஒலுவில் பள்ளக்காட்டில் ஒதுங்கும் யானை இனம்....**

- தர்மபாலன் றிலக்சன்

வனவிவசாயி, வனப்பாது காவலன், வனத்தின் தந்தை என பலவக இருக்கும் யானைகள் புகைப்படமாக மட்டுமே மிஞ்சும் தினம் வந்தால், பூமி அதன் நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

சமூக - இயற்கை உறவானது, இயற்கை மீதான மனிதனின் அதீத மேலாதிக்கம், அறமற்ற வணிக - அபிவிருத்தி பற்றிய கருத்தாக்கங்கள், மூடத்தனமான அறிவியற் செயற்பாடு கள் என்பனவற்றால் குழப்பிவிடப் பட்டுள்ளது. இது மனிதன், விலங்கு கள், தாவரங்கள், நிலம் - கடல் என்பன ஒன்றுக்கொன்று கொண்டும் கொடுத்தும் வாழும் பூமியின் இயற்கைச் சமநிலையை முற்றுமுழுதாகப் பாதித்துள்ளதுடன், உலகை அழிவின் எல்லைக்குத் தள்ளிவிட்டுள்ளது .புவி வெப்பமாதல், காலநிலை மாற்றங்கள், நீர் - வளி மாசடைதல் முதலானவை பாரிய பிரச்சினைகளாக மேற்கிளம்பியுள்ளன. இவற்றின் பின்னணியில் இயற்கைப் பேரழிவுகளும் நோய்களும் பெருகுகின்றன. இந்த இடத்தில் பச்சைக் கருத்துநிலை (Green Ideology) நிலம் - நீர் மேலாண்மைகள் தொடர்பான உரிமைகள், சூழலியல் ஒழுக்கங்கள், பல்லுயிர் நலனோம்பு முறைகள் என்பனவற்றை வற்புறுத்தும் புக்சின்னின் "சமூகச்சூழலியல்' (Social Ecology) சார்ந்த சூழலியல்வாதக் கோட்பாட்டை உள்ளடக்கிய சூழலியல் அரசியற் செயற்பாடுகள் - கொள்கைத் தீர்மானங்கள் - செயற்பாடுகளை முன்னிறுத்தும் சமூக - இயற்கை உறவைப் பலப்படுத்தும் - மறுசீரமைக்கும் பரவலான செயற்பாடுகளைச் சமகால உலகம் வேண்டிநிற்கிறது.

இப்பரந்துபட்ட சூழலியல் அச்சுறுத்தல் களத்தில் பேரச்சத்தை ஏற்படுத்துவனற்றில் தலையாயது யானைகளின் அழிவும், அவை வாழத்தகுந்த சூழலினது அழிப்புமாகும். ஒட்டுமொத்த உயிர் வாழ்க்கைச் சூழலினது அழிவின் மிகமுக்கியமான கண்ணிகளில் ஒன்றாகவே யானைகளின் அழிவைக் குறிப்பிடலாம். இந்த உலகளாவிய நிலவரத்திற்கு இலங்கையும் விதிவிலக்கானதல்ல. இலங்கையில் சுமார் 6500 யானைகளே உள்ளதாகக் கணக்கெடுக்கப்பட்ட நிலையில்கடந்த 2018ஆம் ஆண்டு சுமார் 311 யானைகள் உயிரிழந்துள்ளதாகவும் யானைகள் தாக்கியதில் 95 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யானை இலங்கையின் வரலாறு, புராணிகங்கள், மதம், பண்பாடு என எங்கணும் ஊடுகலங்து நிற்கின்ற ஒரு பொருண்மை ஆகும். 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 19, 500 யானைகள் இலங்கையில் இருந்ததாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. நூறு வருடங்களின் பின்னர் இத்தொகையானது, யானைகளைக் கண்மூடித்தனமாகப் பிடித்தல், யானைகள் பெருமளவில் விபத்துக்களில் சிக்குதல், பொழுதுபோக்குக்காகவேட்டையாடப்ப டுதல், பாரியளவிலான கமத்தொழில், நீர்ப்பாசனக் கருத்திட்டங்கள் மற்றும் பாதைகள் அமைத்தல் உள்ளிட்ட நகர அபிவிருத்தித் திட்டங்கள் என்பனவற்றின் தூரநோக்கற்ற - தட்டையான அபிவிருத்திப் பார்வைகள் காரணமாகக் குறைந்து கொண்டே வருவது பேரச்சத்தை ஏற்படுத்துகிறது. மேலும் பேரளவில் நிகழும் காடழிப்புக்களும் யானைகளது பாரம்பரியமான பயணப் பாதைகளைக் கைப்பற்றலும் என யானை - மனிதமோதல்களின் போது தவிர்க்க முடியாது யானைகள் (ஆண்டுதோறும் ஏறத்தாழ 250 யானைகள்) கொலை செய்யப்படுவதும் யானைகள் பெருமளவில் குறைவடையக் காரணமாகும். யானைகளின் வாழிடத்தில் மனிதனின் அத்துமீறிய தலையீடு காரணமாக யானைகள் மனிதர்களைத் தாக்கியும் (வருடந்தோறும் ஏறத்தாழ 50 பேர் வரை) கிராமங்களுக்குள் புகுந்து பயிர்நிலங்களை அழித்தும் சமூகத்தில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருவதும் அன்றாடச் சேதிகளாகும்.. இத்தகைய நிலவரங்கள் அனைத்துக்கும் மனித சமூகத்தின் இயற்கை மீதான எதேச்சாதிகாரப் போக்கே காரணமாகும். அதனால் இதற்கான ஒட்டுமொத்த பொறுப்பையும் மனிதகுலமே ஏற்க வேண்டும்.


யானைகளும் மனிதர்களைப் போல் பாசம், அறிவாற்றல், பெருந்தன்மை, நினைவாற்றல், தன்னை நிலை நிறுத்திக்கொள்ளத் தொடர்ந்து பாடுபடுதல் போன்ற அசாதரண குணங்கள் உடையவைதான். அதேநேரம் காட்டினது சுற்றுப்புற இயற்கையின் உயிர்ச் சங்கிலியின் மையமாக இருப்பனவும் அவைகளே. குறிப்பாக, சுற்றுச்சூழல் இயக்கத்தில் அவை நேரடியாகவும் மறைமுகமாகவும் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றன.

யானைகளுக்குத் தினமும் 150-200 கிலோகிராம் வரை உணவு தேவைப்படுகிறது. அவை இலைகள், மரப்பட்டைகள் ,புற்கள், மரக்குச்சிகள் முதலியவற்றை உண்பதுடன். சுமார் 12-18 மணித்தியாலங்களை உணவு தேடுவதற்கே செலவிடுகின்றன. அதேபோல குடிப்பதற்கும் உடல் வெப்பத்தைத் தணிப்பதற்கும் தினமும் 220லீற்றர் தண்ணீர் யானைகளுக்குத் தேவைப்படுகிறது. இத்தகைய "உணவு மற்றும் நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான யானைகளது மரபுரீதியான செயற்பாடுகள், காட்டையும் ஏனைய விலங்குகளையும் - அதனால் உலகத்தின் சுற்றுச்சூழல் வளங்கள் அனைத்தையும் தொடர்ந்து பேணிப் பாதுகாப்பனவாகவும் பெருக்குவனவாகவும் அமைந்துள்ளன."என வனவிலங்கு ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

யானைகள் அதிகமானளவில் மரங்களிலிருந்து இலை, தழைகளைப்பறித்து உண்ணும் செயற்பாட்டினால் சூரிய வெளிச்சமானது, காடுகளின் தரைப்பகுதிக்கு ஊடுருவிச் சென்று,சிறியபுல், பூண்டுகள் வளர உதவிபுரிகின்றன. அதேநேரம் இவ்வாறு பூமியில் வளரும் புல், பூண்டுகளை அடியோடு பிடுங்கி யானைகள் உண்பதனால் காட்டின் தரைப்பகுதியில் காற்றுச்சுற்றோட்டம் அதிகரிக்கப்பட்டு மீளவும் புதியபுல், பூண்டுகள் வளரவும் இவை வழி சமைக்கின்றன. இன்னொருபுறம் காடுகளின் மூத்தகுடிகளான யானைகளுக்குக் காட்டுப் பகுதிகளில் நீர்வளம் இருக்கும் இடங்கள் தெரியும் என்பதுடன், வெப்பமான காலங்களில் நீரைப் பெற்றுக் கொள்ள யானைகள் தோண்டும் தண்ணீர்ப் பள்ளங்கள், அவற்றுக்கு மட்டுமன்றி ஏனைய வனவாழ் விலங்கினங்களுக்கும் உதவுகின்றன.

"காடுகளின் தோட்டக்காரர்" என அழைக்கப்படும் யானைகள். நாள் ஒன்றுக்கு சுமார் 30 கி.மீ. இடம் பெயர்வதன் மூலம், அங்கெல்லாம் தனது கழிவுகளால் ஊட்டச்சத்துடன்கூடிய விதைப் பரவலைச் செய்கிறது. யானைகளின் லத்தியில் (மலத்தில்) முளைதிறன் உள்ள விதைகளும் - ஊட்டமான உணவுக் கழிவுகளும் புதிய தாவரங்கள் முளைத்து காடுகளை மேலும் வளமாக்க உதவுவகின்றன் அவை வனங்களுக்கு உரமாகின்றன் லத்தியில உள்ள தாதுஉப்பு பூச்சிகளுக்கு உணவாகின்றன் சூடான லத்தி பட்டாம்பூச்சி போன்றபூச்சிகள் அமர்ந்து குளிரைபோக்க உதவுகின்றன. மேலும் "காடுகளிலிருந்து ஒருபங்கு உணவைப் பெற்றால் பத்துமடங்கு உணவுற்பத்திக்குத் தேவையான மரம், செடிகளை மறைமுகமாக உற்பத்தி செய்கின்றன."என வனவியல் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. அதுமட்டுமின்றி, அடர்ந்தகாடுகளில் யானைகள் கூட்டம் கூட்டமாகப் பயணம் செய்வதனால் ஏற்படுத்தப்படும் வழித்தடங்கள் சிறிய விலங்கினங்களுக்கும் - மனிதர்களுக்கும் காட்டில் பயணப்பாதையை உருவாக்கித் தருகின்றன.

இவ்வளவு நன்மையையும் இயற்கைக்கும் மனிதனுக்கும் வழங்கும் யானைகளுக்கு உணவாக



அண்மைக் காலங்களில் குப்பைகள், பொலித்தீன்கள், பிளாஸ்ரிக்பொருட்கள் உள்ளிட்ட இரசாயனக் கழிவுப் பொருட்கள் நிர்பந்திக்கப்பட்டுள்ளமை யானைகளின் இருப்பின் மீது மாபெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது. இவையானைகளின் இறப்புவீதத்தை அதிகரிக்கும் பிரதான காரணிகளுள் ஒன்றாக இன்று காணப்படுகின்றன.

உதாரணமாக இலங்கையின் கிழக்கே அம்பாறை மாவட்டத்தில் பெருமளவான காட்டுயானைகள் குப்பைமேடுகளைத் தேடி உணவுக்காக வருகின்றன. சம்மாந்துறை, கல்முனை, காரைத்தீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று மற்றும் ஆலையடிவேம்பு ஆகியபகுதிகளில் சேகரிப்படும் குப்பைகள் அவற்றை அண்டியுள்ள அஷ்ரப்நகருக்கு அருகிலுள்ள பகுதிகளில் கொட்டப்படுகிறது. "குறித்த குப்பைமேடுள்ள பகுதிகளுக்கு அதனை அண்டிய காட்டுப்பகுதிகளிலிருந்து தினமும் சுமார் 40 யானைகள் அவற்றை உணவாக உட்கொள்ள வருகின்றன." எனக் கூறப்படுகிறது. .முன்னர் குறித்த குப்பைமேட்டினை அண்டியபகுதிகளில் யானைப் பாதுகாப்புவேலிகள் அமைக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றையானைகள் சேதமாக்கியுள்ளன. அதனால் தற்போது யானைகள் எவ்விததடையுமின்றி குப்பைமேடுகளுக்கு வந்து அங்குள்ள கழிவுப்பொருட்களை உட்கொள்கின்றன. அவற்றில் ஆபத்தான பிளாஸ்ரிக்பொருட்கள், உடைந்தகண்ணாடிப்போத்தல்கள் உள்ளிட்ட பொருட்களும் காணப்படுகின்றன. அதேவேளை குப்பைமேட்டைத் தேடி உணவுக்காக வரும் யானைகள் பின்னர் அங்கிருந்து அருகிலுள்ள மக்களின் விவசாயநிலங்களை நோக்கி நகர்ந்து விவசாய நிலங்களை நாசம்செய்வதுடன், ஊர்மனைக்குள் புகுந்து மனிதர்களுக்கும் ஆபத்து விளைவிக்கின்றன. இவ்வாறு கழிவுப்பொருட்களை உட்கொண்டதனால் இறந்த யானைகளைப் பரிசோதித்தபோது, அவற்றின் வயிற்றிலிருந்து ஜீரணமாகாத பொலித்தீன்கள் ,பிளாஸ்ரிக்பொருட்கள் முதலிய ஆபத்தான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

எனவே யானைகளை இவற்றிலிருந்து பாதுகாக்கவேண்டிய நிலைமை வந்துள்ளது. அவ்வகையில் இவ்வாறு குப்பைமேடுகளை நாடிவரும் யானைகளைத் தடுக்குமுகமாக "கழிவுப்பொருட்களை அகற்றும் இடங்களில் யானைகள் நடமாடுவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்" எனும் தலைப்பில் கடந்த 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஏழாம் திகதி நடைபெற்ற **MKG/17/1057/708/014** எனும் அமைச்சரவைக் கூட்டத்தில், கழிவுப் பொருட்களைக் கொட்டும் இடங்களுக்கு யானைகளை வராமல் தடுப்பதற்கு மின்சார வேலிகளை நிர்மாணித்தல், அதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு உள்ளூராட்சிச் சபைகளுடன் தொடர்பை ஏற்படுத்தல் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அவை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது விசனம் தருவதாகும்.


அத்துடன் வனஜீவராசி வலயத்திற்கு அண்மையான பகுதிகளில், 54 இடங்களுக்கும் மேலாக தொடர்ந்தும் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதாகவும் அவற்றைச் சூழவுள்ள பகுதிகளில் சுமார் 300 யானைகள் வரை நடமாடுவதாகவும் கணக்கெடுப் பொன்று சுட்டிக்காட்டுகின்றது. ஆகவே இவை தொடர்பான விழிப்புணர்வு அரச, சமூக மட்டத்தில் உடனடியாக ஏற்படுத்தப்படுவதுடன் விரைந்து செயற்படுத்தப்படவும் வேண்டும்.

இவற்றை மாற்றி அமைக்கத்தக்க சுற்றுச் சூழலியல் சார்ந்த வியூகங்கள் அவசரமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவற்றை நிறைவேற்ற சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், துறைசார் நிபுணர்கள்.மற்றும் அதிகாரிகளுடன் பொதுமக்களும் இணைந்து பொறுப்புணர்வுடன் செயற்படுவது உடனடித் தேவையாகும்.

இப்பிரச்சினைகளை மையப் பொருளாக்கியே இக்கண்காட்சி அமைகிறது.

இந்த ஒளிப்படக் காட்சியானது சூழலியல் ஒளிப்பட அணுகுமுறை சார்பானது. சூழலியல் ஒளிப்படங்கள் இயற்கைச் சூழலை கலைத்துவத் தேவைகருதியோ, ஆய்வுத் தேவைக்காகவோ அல்லது சூழலைக் கண்காணிக்கும் நோக்கம் கருதியோ பயன்படுத்திக் கொள்வதாகும். அவ்வகையில் இவ்விடயங்களை வெவ்வேறு விகிதாசாரத்திற் கொண்ட விழிப்பூட்டற் செயற்பாட்டை நோக்கியதாக இந்த ஒளிப்படங்களின் காட்சி அமைகிறது. அது ஒருவகையில் கலைக்கும் - செயற்பாட்டுவாதத்திற் கும் இடையிலான பிணைப்பிலிருந்து உருவாவது. கிழக்குமாகாணத்தின் குறிப்பிட்ட பிரதேசச்சூழல், அங்கு வாழ்கின்ற மனிதர்களுடனான உரையாடல்கள், தொடர்ச்சியான களப் பயணங்கள், குறிப்பிட்ட சூழல் மீதான தொடர் கண்காணிப்புகள் என்பவற்றினூடாகவே இந்த ஒளிப்படக் காட்சி சாத்தியமாகியுள்ளது. அந்தவகையில் ஆவணப் புகைப்படங்களாகவும் பரிமாணம் பெறுகின்ற இவை என் சிறுபராயத்தில் கேட்டு வாசித்த விலங்குக் கதைகளுடாக மனதுள் வந்தமர்ந்த யானைகளது இக்கட்டுக்கள் மீதான தனிப்பட்ட கவலையின் வெளிப்பாடுமாகும்.



















நன்றி முகநூல்

இவ் இணைய வார இதழ் : இல. 151, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நோர்சி மீடியா பணிமனையில் தயாராகி 16.09.2020 அன்று வெளியிடப்பட்டது.